
உ

கடவுள் துணை.

# குணவாகடம்



சென்னை

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1928.

இதன் விலை அணா - 5.

உ

கடவுள்துணை.

# குணவாகடம்.

திருமூலநாயனூர்
அகஸ்தியமுனிவர்
தேரையர் இவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய பிண்டோற்பத்தியும்,
முதல்வந்தனுபவிக்கும் ரோய்களின் குணங்களும்,
நாடிப்பரிட்சைகளும், கிஷாயவகைகளும்
ஆகிய பாடல்கள் 421.

இஃது
குயப்பேட்டை
வீ. இராஜுமுதலியார் அவர்களால்
பார்வையிடப்பட்டது.

மதுரை புதுமண்டம் புக்ஷாப்
பி. நா. சி ஏஜண்டு
மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்
சென்னை.
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1928. [அணா-6.

குரு. இராமசாமிக்கோன்,
புத்தகஷாப் புதுமண்டபம்,
மதுரை.

உ

கடவுள் துணை.

# குணவாகடத்திரட்டு.

## திருமூலநாயனார் அருளிச்செய்தது.

### விநாயகர் துதி.

அந்திநிறத்தனை யானைமுகத்தனை
இந்துவிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானவிளக்கைப்
புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

### தேவி துதி.

தாதாவைப்போலத் தண்ணருள்கொடுப்பவன்
வேதாகமத்தின் மெய்ஞ்ஞானமெய்ப்பொருள்
ஆதாரசத்தி வரியமனோன்மணி
மாதாவின்பாதம் வைத்தேனென்சென்னியில். 1

### கருப்போற்பத்தி.

சென்னியில்வைத்தே திருநந்திதாளிணை
மன்னியகாயம் வந்தவகையாம்
கன்னிவகுத்த கருப்பத்திருமந்திரம்
உன்னியுரைத்தே னொருநூற்றிருபதே. 2

உடலுற்றவாறு முயிருற்றவாறும்
மடையுற்றவொன்பதி வாயிலினாறும்
திடமுற்றதத்துவ சீவபுலன்களும்
கடலுற்றநீர்போற் கண்டகருவிதே. 3

கருவையொழிந்தவர் கண்டநான்மூவேழும்
யுருடனுடலிற் பொழிந்ததுமற்றொன்றும்
தெரிவைகருக்குழி தேயுபுகுந்தே
உருவமிரண்டா யோடிவிழுந்ததே. 4

விழுந்ததிலிங்கம் விரிந்ததியோனி
ஒழிந்ததுமுதலைந் துயிரோடேறித்
தெழிந்ததப்புத் தேற்றுங்குணமும்
பொழிந்துபுகுந்தது புணர்கின்றபோதே. 5

போகின்றகெட்டும் புகுகின்றபத்தெட்டும்
ஆகின்றமுற்றினு மொன்பதுவாயினும்
நாகனுமெட்டும் நான்கிரவிமதியும்
பாகடாவிடிற் படர்ந்தனலாமே. 6

ஏறவெதிர்க்கிலி னலயன்றானாகும்
நேரொக்கவாகி னிவர்போகந்தானாகும்
மாறவெதிர்க்கின் மறையவன்றானாகும்
பெருத்தமைந்தனும் பேராசானாமே. 7

ஆண்மிகினாணும் பெண்மிகிற்பெண்ணாம்
பூணுமிரண்டொன்றிப் பொருந்திலலியாகும்
தாண்மிகவாயிற் றரணிமுழுதாளும்
பாண்மைமிகுந்திடிற் பாய்ந்ததுமில்லையே. 8

வயது.

பாய்ந்துமுன்னைத்தோடிற் பாராயுளாறாறும்
பாய்ந்துபின்னைத்தோடிற் பார்வயதைம்பதாம்
பாய்ந்திடும்வாயுப் பகுத்தறிந்திவ்வகை
பாய்ந்திடும்போகிக்குப் பாய்ச்சலுமாமே. 9

அங்கவீனம்.

பாய்கின்றவாயுக் குருகிற்குறளனாம்
பாய்கின்றவாயு வளையின்முடமாகும்
பாய்கின்றவாயு நடுப்படிற்கூனாகும்
பாய்கின்றவாயு மாதர்க்கிலைபார்க்கிலே. 10

மந்தன் ஊமை குருடன்.

மாதாவுதர மலமிகின்மைந்தரும்
மாதாவுதரஞ் சலிமிகி லூமையாம்
மாதாவுதிரத்தி ரண்டொக்கிற்கண்ணில்லை
மாதாவுதிரத்தில் வந்தகுழவிக்கே. 11

ஆண் பெண் அலி இரட்டைப்பேறு.

குழவியுமாணால் வலத்தாதேயாகில்
குழவியும்பெண்ணா மிடத்தாதுவாகில்
குழவியுமிரண்டாம் பானனெதிர்க்கில்
குழவியுமலியாங் கொண்டகாலொக்கிலே. 12

கொண்டநல்வாயுவிருவர்க்குமொன்றிடில்
கொண்டகுழவியுங்கோமளமாய்விடும்
கொண்டவிவ்வாயுக்குறிப்பறிந்திவ்வகை
கொண்டடமில்லைகோலமுன்னுதே. 13

பஞ்சபூத பிண்டோற்பத்தி.

உன்னியகர்ப்பக்குழியாம்வெளியிலே
பன்னியநாதம்பகர்ந்தபிருதிவி
வன்னியும்வாயுவுமாயுறுஞ்சுக்கிலம்
மன்னியசமனாய்வளர்க்குமுதகமே. 14

உதகமுதிரமுறுங்கனல்வாயுவால்
சிதகுறுமங்கங்கள்செய்துமுடித்திடும்
பதகுறுமுரோமம்பகர்தனசயத்தி
நிதகுறுமொன்பதுவாயிலுநீங்குமே. 15

நீங்கிடநீங்கிடநிமிர்ந்துவளர்ந்தோங்கு
ஓங்கிடவோங்கிடவுறுதியாம்வாயுவும்
வாங்கிடவாங்கிடவன்னிதலைக்கொளும்
பாங்கிடப்பாங்கிடப்பத்தாகுந்திங்களே. 16

திக்கள்பத்தாகிற்றேய்வொடுவாயுசேர்ந்
தங்கிமலர்த்தியமளியாய்க்கீழ்நோக்கிப்
பொங்கிப்பிறந்தநாள்புகழ்ணார்வெறுவீணர்
தங்கிச்செனிக்கையிற்றானேயுமுற்றதே 17

மூலநாடி-72000-த்தில்-தசநாடி.

உற்றவிவரமுறுதியாமெங்கந்தி
பற்றியமூறம்பகர்ந்திடுநாடிதான்
எற்றியேயெண்டிலெழுபத்தீராயிரம்
மற்றதிர்பத்துவளமானநாடியே. 18

தசநாடியில்-தசவாய்வும்-திரிநாடியும்
6-சக்கரமும்-1-மண்டலமும்.

வளமானபத்தில்வழங்கும்சமவாயு
உளமாமிடையிற்சுழியெனமூன்றுண்டு
களமானசக்கரங்காட்டியதாறுண்டு
தளமானமண்டலந்தான்மூன்றாய்பாருமே. 19

பாருமிடைகலைபிங்கலைமாறியே
தாரும்பெருவிரற்காலொடுதாணேறி
காருங்கழுத்திற்கபாலவரைநின்று
வாருமிடவாய்வலக்கரஞ்சாருமே. 20

வலக்கரந்தன்னில்வளமானபிங்கலை
நிலைக்கவிடக்கரநின்றதிடைகலை
துலக்கநடுமையஞ்சுழிமுனையோடிடும்
பிலக்கவிவைமூன்றாற்பிறந்ததுதாதுவே. 21

### மூவகைநாடியில் மூவகைத்தாது.

வாதுமுறையேதனியிடைவாதமாம்
போதுபிங்கலைபுகன்றதுபித்தமாம்
மாதுசுழிமுனைவழங்கிடுமையமாம்
ஓதுமுறைபார்த்துணர்ந்தவர்சித்தரே. 22

### மூவகைவாயுநாடி.

உணர்ந்தவபானனுறுமந்தவாதத்தில்
புணர்ந்தபிராணன்புகுமந்தப்பித்தத்தில்
அணைந்தசமானடங்குங்கபத்தோ
டிணைந்திவைமூன்றுக்கெடுத்தகுறியொன்றே. 23

### மூவகைநாடியறியும்விவரம்.

குறியாம்வலக்கரங்குவிந்தபெருவிரல்
மறியாவதன்கீழ்வைத்திடுமூவிரல்
பிறிவாய்மேலேறிப்பிலத்ததுவாதமாம்
அறிவாய்நடுவிரலமர்ந்ததுபித்தமே. 24

பித்தத்தின்கீழேபுரண்டதையமாம்
உற்றுற்றுப்பார்க்கவோர்நரம்பேயோடும்
பத்தித்தமூவரும்பாய்கின்றவேகத்தால்
மத்தித்தநாளம்போல்வழங்குநரம்பிதே. 25

### மூவகைநாடியறியுமாத்திரை.

வழங்கியவாமமாத்திரையொன்றாகில்
தழங்கியபித்தந்தன்னிலரைவாசி
அழங்குங்கபந்தானடங்கியேகாலோடில்
பிறங்கியசீவற்குப்பிசகொன்றுமில்லையே. 26

மூவகைநாடிநடப்பு.

இல்லையேவாதமெழினடைகோழியாம்
எல்லையேபித்தமெழும்புந்தவளைபோல்
ஒல்லையேயையமூர்ந்திடும்பாம்புபோல்
அல்லையேகண்டறிந்தவர்சித்தரே. 27

வாதபித்தசிலேத்துமமிருப்பிடம்.

அறிந்திடும்வாதமடங்குமலத்தினில்
பிறிந்திடுபித்தம்போராஞ்சலத்தினில்
மறிந்திடுமையம்வாசிக்கும்விந்துவில்
உறைந்திடுமூன்றுக்குறவாந்தலமிதே. 28

வாதபித்தகபவர்ணம்.

உறவாங்கறுப்புஞ்சிவப்புறுநல்வாதம்
குறைவானபச்சைப்பசுமைகொடும்பித்தம்
நிறைவானவெண்மையால்நின்றதுநல்லையம்
அறைவானவர்ணமதாகுந்தலமதே. 29

தேவபஞ்சபூதம்.

சலங்காட்டியிந்தச்சடமானவைம்பூதம்
நிலங்காட்டிநீர்காட்டிநின்றிடுந்தீகாட்டி
வலங்காட்டிவாயுவால்வளர்ந்தேயிருந்தது
குலங்காட்டிவானிற்குடியாயிருந்ததே. 30

இருந்தவிவ்வைந்தாலெடுத்தசடமிது
பிரிந்திடுமாமிசம்பிருதுவின்மயமாகும்
சொரிந்திடுமிர்தநீர்சொற்குறியப்புவாம்
வரிந்தியவன்னிவளமாய்வெதுப்புமே. 31

வெதுப்பத்துடனேவிடுபட்டுநாசியில்
எதுப்புற்றுநிற்குமிதுகாணும்வாயுவாம்
கதுப்பொத்தேயெல்லாங்கவளித்திடமிட்டு
மதுப்பொத்துநிற்கும்வானின்வளப்பமே. 32

வளப்பங்கேள்பூமிவாசிக்குநாசியில்
களப்பமாம்வன்னிதானுறுங்கண்ணினில்
அளப்பமாமப்போவடங்கிடுநாவினில்
பளப்பநல்வாயுப்பரிசிக்குமெங்குமே. 33

எங்கியசாதிலிருந்துறுமாகாசம்
பொங்கியதைந்துக்குட்பொல்லாதிம்மூன்றுதான்
தங்கியவாயுச்சமர்த்தன்மகாவாதம்
பங்கியவன்னியாற்பகுந்ததுபித்தமே. 34

பகுந்தசலத்திற்பரிசிக்குகல்லேயம்
வகுந்தவிம்மூன்றால்வளர்ந்தது நோயெல்லாம்
அகந்தானறிந்தளவிட்டயோகிகள்
மகிழ்ந்தேயிதினின்றமயக்கமறிவரே. 35

வாதகுணம்.

அறிபவிம்மூன்றினதாண்மைசொன்னார்நந்தி
எறியநல்வாதமெறிக்குங்குணங்கேளு
குறியெனக்கைகால்குளேச்சுவிலாச்சந்து
ப்றியெனநொந்துடர்பச்சைப்புண்ணாகுமே. 36

புண்ணாய்வலிக்கும்பொருமுங்குடலோடித்
தண்ணாமலத்தைத்தம்பிக்கும்போக்கா
தொண்ணாவாசனமுறநேவசுருக்கிடும்
பண்ணார்குளிர்சீதம்புகுத்திடும்வாதமே. 37

பித்தகுணம்.

பகுத்திடும்பித்தம்பலபலசிந்தையாம்
வகுத்திடும்வாந்தியும்வாய்நீர்மிகவூறும்
மகுத்திடுமேனியின்மாட்டியெரிப்பேறும்
மிகுத்துத்தவனிக்குமிகவிடங்கைக்குமே. 38

ஐயக்குணம்.

இடங்கியவையமேவிரைப்போற்றிடுந்
தடங்கியிருமிடுந்தனிவிலாவிரண்டுநோம்
அடங்கிற்சுரங்காயுமளவற்றகோழைநீர்
இடங்கியுடல்வற்றியிரத்தமுங்கக்குமே. 39

கக்கியமூவர்களிற்பெலன்கேளு
ஒக்கியவாயுவுடல்கூடிடிற்பெலன்
தக்கியவாயுசகலத்துக்காதாரம்
சிக்கியநோயைச்சிறக்கவினக்குமே. 40

### தாபச்சுரமும் சீதளச்சுரமும்.

விளக்கியவன்னியும்வாயுவுமேற்கொண்டால்
தளக்கிபதாபச்சுரங்காணுந்தோஷமாம்
வளக்கியவப்புவும்வன்னியும்மேற்கொண்டால்
இளக்கியசீதளச்சுரங்காணுமென்பரே. 41

### தோஷபிறக்குறி.

பேரானதோஷம்பிறக்குமுறைகேளு
வாரானவாதமும்வன்னிகருந்தோஷமாம்
தாரூனபித்தமுந்தழலூடில்வெண்மையாம்
சேரூனவையமுஞ்சிவப்பேறும்வாய்விலே. 42

வாயுவடங்கினல்வளமானதோஷம்போம்
வாயுவெழும்பினன்மண்ணுநீரொன்ருகும்
வாயுநீரால்வழங்கியவன்னிசாம்
வாயுவுமாகாசமண்டலவோசையே. 43

ஓசையிலேழுமொளியினிலோரைந்தும்
நாசியின்மூன்றுநாளினிலிரண்டும்
தேசியுந்தேசனுஞ்சேர்ந்துபிரிந்திடம்
மாசிலாநந்திமகிழ்ந்துரைத்தாரே. 44

### ஓராண்டிலுமீராண்டிலும் சாகுங்குறி.

உரைத்ததுநாசியுறுதிக்குறிகேள்
விரைத்திடப்பிங்கலைவிடாதோடின்மூன்றுநாள்
இரைத்தசடமாண்டிலெய்திடுமோகாசம்
பரத்திலிரண்டோட்பாயிலீராண்டெண்ணே. 45

### மூவாண்டிலும் ஆறுதிங்களிலும்சாகுங்குறி.

எண்ணியொருநாளியங்கிடிற்பிங்கலை
தண்ணியமூவாண்டிற்றப்பாதுமரணம்
ஒன்றியபயத்திலோடிடிற்பத்துநாள்
மண்ணின்மதியாறின்மரிப்பான்குறியிதே. 46

### நாள்மூன்றிலும் பதினைந்திலும் சாகுங்குறி.

குறிகேளுமூக்கன்றிக்குலவிவாய்வழியோடில்
மறிகேளுமூன்ருநாள்மரித்திடுவன்றப்பாது
தெறிகேளுமும்மலமுந்திரண்டுமிகக்குறைந்துவரில்
பரிவாகும்பட்சத்திற்பாருயிர்தான்றப்பாதே. 47

### 6-திங்களிலும் உடனேயும் சாகுங்குறி.

தப்பாதுவாய்நீர்தான்ருக்கிற்றன்மேல்விழிலே
ஒப்பாகத்தனுமறையவொழிந்திடுவன்மதியாறில்

செப்பாகத்தானிருக்கச்சேர்ந்தநிழலலேந்திடினும்
அப்பாகேள்சாவுநிசமறிந்துகற்பங்கொண்டிடே. 48

கொண்டிடுந்தோஷக்குறிசொன்னேனந்தி
தண்டுமுதடுந்தனிப்பல்லுநாக்கொன்றும்
மண்டிடுந்தாதுவளமாய்க்கறுப்பேறில்
ஒண்டிடுமோறுநாளுறுதியாய்ச்சாவானே. 49

உறுதியாம்பித்தமுடம்பிளப்பதாகும்
பொறையாகத்தாவிக்கிற்போவான்மதியொன்றில்
அறுதியாமையகல்லத்தீபுலர்ந்தே
உறுதியோர்மதியிலொடுங்கிடுஞ்சீவனே. 50

சாகாக்குறியும் சாகுங்குறியும்.

சிவகலையாய்ச்சேர்ந்திடுநாடியில்
ஆவக்கரம்வைத்தழுத்திடின்மேலேறும்
தாவொத்துமேனோக்கிற்சாகானெருநாளும்
பாவொத்துக்கீழ்நோக்கிற்பதையாமற்சாவானே. 51

அமிர்தமுண்டும்சாகுதல்.

பதைக்கின்றமூவரிற்பக்குவந்தப்பியே
நிதைக்கின்றவாதமும்பித்தமும்நீங்கிடில்
சுதைக்கொண்டிருந்தாலுந்தோற்றியவுயிர்விடும்
பிதைக்கொண்டவாதபித்தமும்பெலனாமே. 52

கைவிடுங்குறிமுதலியன.

பித்தமடங்கினாற்பேசாதேபோய்விடு
எத்தியவையமெழும்பிடிற்கிட்டாதே
எத்தியவாதமெழும்பின்மருந்துசெய்
எத்தியிம்மூன்றினியல்பையறிந்திடே. 53

சாகாக்குறி சாகுங்குறி.

அறிந்திடிம்மூன்றுமடங்கியேமுட்டினும்
எறிநதுமிகவோடினுமெய்தாதேசாவுதான்
பறிந்துநற்றுதுப்பற்றற்றுக்கீழ்நோக்கில்
மறிந்தேயுயிர்சென்றுமறலிகைப்புக்குமே. 54

மகாதோஷக்குறி.

புக்கியுந்தியிற்கைபொருந்தவொருவிரல்
எக்கியுபரமெழும்பின்மகாதோஷம்
அக்கியவுந்திதானுதாரம்வாயுவிற்கு
முக்கியமறிந்துமுழுதும்சொல்வமே. 55

## தசகாடிகளிருப்பிடம்.

தாதுமுறைசேடனித்தகுதிச்சந்தோ
டோதுறுகாமியமுந்திநெடுமார்பு
காதுநெடுமூக்குக்கண்டங்கரம்புருவம்
போதுறுமுச்சிபுகழ்பத்தும்பார்த்திடே. 56

## சாகாக்குறி சாகுங்குறி.

பாற்கிற்றசகாடிபதைப்புண்டாய்நின்றிடில்
ஏற்கிற்சிலநாளிருப்பானிறந்திடான்
காக்கிடுங்காமியங்கழன்றுசுழிததோடில்
ஆர்க்கிலெமனுலகடைவதுண்மையே. 57

## உமிநீர்க்குறியாற்சாவு.

உண்மைகேளின்னுமுமிந்திடநோயுள்ளோன்
தண்மையாய்த்தூரமபோய்த்தாக்கிடிற்சாவில்லை
கண்மையாம்வாயுக்கழன்றிடிற்கிட்டிடும்
வண்மையாய்ப்பார்க்கவகுத்தனர்நந்தியே. 58

## வாயு நோய் சுரம் திரிதோஷம்.

வகுத்தமுறைப்பாடுமந்தத்தால்வாயுவாம்
மிகுத்தநல்வாயுவால்விளைந்திடுநோயெல்லாம்
பகுத்திவையிரண்டாற்பாரச்சுரமுறும்
முகுத்திவைமூன்றுன்முத்தோஷங்காணுமே. 59

## மந்தம்வருதல்.

காணுமேமந்தங்கவனிக்குமன்னத்தாய்
காணுமேமந்தக்கடுமாமிசமீறில்
காணுமேமந்தங்கலந்தமாப்பண்டத்தால்
காணுமேமந்தங்கருமேதிப்பாலுக்கே. 60

மேவியவன்னத்தால்விளங்கியதிச்சடம்
பாவியேகொன்றுப்பழியுறுமன்னந்தான்
ஆவின்மிதந்தப்பிலையுற்றுநோயாகும்
காவிலிவையெலாங்கண்டுகொள்ளன்னமே. 61

அன்னம்பிறந்ததனைத்துவிதையிலும்
மன்னியவெட்டைமகாசீதமிரண்டினால்
பன்னியறிந்திதைப்பார்ப்பார்பெரியோர்கள்
கன்னிமபக்கத்தாற்கண்டிடுமேகமே. 62

## மேகம்பிறக்கும்விதம்.

மேகம்பிறந்தவிதஞ்சொன்னானந்நந்தி
ஆகமிளநதைப்பருவமதில்மோகித்துப்

பேர்க்கதினஞ்செப்பிற்புகழ்மந்தத்தேகூடில்
வாகப்பசியாலவழக்குஞ்சையோகமே. 63

சையோகஞ்செய்யத்தணித்தகழிபோடும்
ஐயாவயிர்தமடங்கிக்கனலேறும்
மெய்யாகவிக்குவிழவிழப்புண்ணுரும்
மையானமேகமவளருக்கிரத்தியே. 64

சிமேகம் வாயுச்சூலை பலமேகம் பலநோய்.

கிரந்திபிரணங்கிளர்த்திடுஞ்சிமேகம்
உரைத்திலைவிரண்டாலுறவாய்வுசூலையாம்
பார்த்திலைமூன்றுற்பலபலமேகங்கள்
தார்த்திலைதொட்டுச்சூழ்நோய்களுற்றதே. 65

இலக்கணமிடுதல்.

உற்றசரத்துக்குமுறுநியாம்வாயுவுக்கும்
அற்றேவருமட்டுமன்னத்தைக்காட்டாதே
முற்றக்கனலரசமுன்வழிபேவரில்
ஒத்தேநிறைந்தோடிலொன்றக்குமஞ்சாதே. 66

காயசித்தி.

அஞ்சியுகத்திலழியாமற்காயந்தான்
மிஞ்சியகற்பம்விளம்பினேனாற்றெட்டுத்
தஞ்சமுறவேதான்றின்னவல்லோர்க்குப்
பஞ்சகரைபோய்ப்பதித்தோங்கிவாழ்வரே. 67

வளமானபித்தத்தின்மருவிக்கபங்கூடில்
தளமானவாயுவாற்றுனேவேதுப்பேறிக்
களமானகன்னத்திற்கட்டியேமூலமாம்
உளமாஞ்சரத்திலுறுகின்றவாயுவே. 68

மலசலக்கட்டு மேல்மூச்சு இரண்டும் உருத்திரவாயு.

வாயுவினாலேமலசலங்கட்டிடும்
வாயுவினாலேவாங்கிடுமேன்மூச்சு
வாயுவினாலேமலருமிரணங்கள்
வாயுவினாலேவருமருத்திரரோகமே. 69

பேசிக்கொண்டிருக்கையிற்சாகுதல்.

ரோகங்கபத்தினுழைத்தேறிவாயுதான்
வாகுற்கிநெஞ்சில்வலித்தேமயக்கிடும்
போகுற்றபித்தத்தைப்போகாமற்றம்பித்துப்
பாகுறதுப்பேசையிற்பதையாமற்கொல்லுமே. 70

சுகசன்னி.

பதமாஞ்சுகசன்னிபாயும்விதக்கேளு
கிதமாகமுழ்கிநிறையவேசாப்பிட்டுக்
குதமாகமந்தத்திற்கூடிடில்வாயுவால்
அதமமாமனுபோகமணைக்கிடிற்சன்னியே. 71

வியர்வை கண்சிவப்பு மகாதோஷம் காயமழிதல்.

சன்னிசுரத்தினற்றுனேறும்வியர்வைதான்
கன்னிசுகத்தினற்கண்கள்சிவப்பேறும்
வன்னிசுகத்தினல்வழங்குமகாதோஷம்
அன்னசுரத்தினலழிந்திடுங்காயமே. 72

மூலம்.

காயத்தின்மூலங்கண்டவிதங்கேளு
பாயொத்ததீபனம்பரிந்தேயடக்கினும்
மாயைமயக்கமலத்தையடக்கினும்
தயுற்றகுண்டலிக்குட்புகும்வாயுவே. 73

முளைமூலம்.

வாயுபுகுந்துமலத்தோடபானத்தைத்
தேயுவைக்கூட்டித்திரட்டிக்கருகிடும்
தோயமலவரிற்சுருக்கிமுன்னேநின்
றுயுமுளைபோலபானனிறுக்குமே. 74

இரத்தமூலம்.

இறுக்குஞ்சிலமூலமெழுமண்டலம்போல
மறுக்காணங்கொண்டுவருகுஞ்சிலமூலம்
உறுக்கியவாயுவாலுதிரமூர்தான்கூடித்
தறுக்கிவிழுக்காட்டுந்தான்ரத்தமூலமே. 75

பசிகெடும் வித்துநாசம் இரைச்சல் கழிச்சலாம்.

மூலமெழுந்திடின் முன்னேபசிபோகும்
மூலமெழுந்திடின் முனைவித்துநாசமாம்
மூலமெழுந்திடின் முழங்குமிரைச்சல்தான்
மூலமெழுந்திடின் முகியாக்கழிச்சலே. 76

கிராணிக்கழிச்சலில் ஆறுவிதம்.

கழிச்சல்கிராணிக்கழியும்விதங்கேளும்
அழிச்சியபித்தமனல்வாதமையமாம
செழுச்சியவாயுசேர்த்திவைமூன்றால்
பழிச்செனப்பேதிக்கும்பார்பெலம்போகுமே. 77

பெலமானமேகத்திற்பிறந்ததொருபேதி
குலமானமூலத்திற்கொடியதொருபேதி
சலமானவாயுவாற்சங்கித்தொருபேதி
வலமானவாறும்வகுத்தமுறையாமே. 78

பித்தமேக நிறக்குறி.

முறையானமேகமுழக்குமிருபதும்
துறையானதெல்லாஞ்சொன்னாரெந்நந்தீ
கறையாகுஞ்சீலையிற்கண்டின்மஞ்சள்போல்
பறையானபித்தத்தாற்படுகின்றமேகமே. 79

வாதமேகவையமேக நிறக்குறி.

படுகின்றசீலைதான்பாங்காம்வெளுப்பாகில்
அடுகின்றவாதத்தாலாகுங்காணம்மேகம்
மடுகுங்கபீனத்தின்மய்னிறம்போற்பட்டால்
விடுகின்றவையத்தாலவிழுகின்றமேகமே. 80

தமரேரிமேகம் நீர்த்துளிமேகம்.

மேகமீவைமூன்றில்வெவ்வேறுகுணங்கேளு
வாகியபித்தமும்வாயுவுங்கூடிடில்
தாகியநாளத்தமரிவெரிந்திடும்
போளுநீர்கட்டிப்பொசிந்துதுளித்தேவிழும். 81

சிக்காநீர்மேகம் கல்லெரிப்புமேகம்.

விழுகுஞ்சிலகோம்விடுபட்டுநீரோடும்
ஒழுபயவாயுவுமொறுங்கினானேகாது
வழுகியமந்தத்தால்வாயுவந்தேபுகில்
கழுகிமுதிர்ந்திடுங்கல்லெரிப்பாளுமே. 82

மேகமிகும் மேனிகருகும் தாதுநட்டமாம்.

ஆகியவாதமும்வாயுவுங்கூடிடில்
தாகியவெள்ளைதடையற்றுமெத்தவாம்
பனிக்கின்றகள்ளுப்பதனிபோனீரோடும்
வாகியதாதுவுழுங்காதுநஷ்டமே. 83

வெளியாக்காணாதெலும்பாயிருமிடுமேகம்.

வழங்கியவையமும்வாயுவுங்கூடிடில்
பிழங்கிப்பொசியாதுபிறவெள்ளைகாணாது
தழங்கிபீளைத்துத்தானஸ்திபோலாவான்
இழங்கிப்புகைத்தேயிருமிடுமேகம். 84

இருமியபித்தமும்வாதமுங்கூடிடில்
மருவச்சலமேகம்வாரிதிபோலாடும்
உருவம்வேருக்குமுண்டவுடற்காய்ந்திடும்
உருகவேயூனோடுறிஞ்சிபினிக்குமே. 85

மதுமேககுணம்.

இனிக்கின்றவாதத்திடைசேரிலையந்தான்
பனிக்கின்றகள்ளுப்பதனிபோனீரோடும்
கனிக்கின்றமேனிகரைந்துவெளுப்பேறும்
தனிக்குமதுமேகந்தப்பாதேனையமே. 86

இரத்தமேகம்.

ஐயமும்பித்தமுமணைந்திடுங்காலத்தில்
கொய்யுறுமிரத்தங்கொப்புளிக்குந்தணடின்
மையறுங்கண்ணுட்குமகத்தாம்பெறும்பாடாம்
வையறுவேகம்வரிசைமுறைகேளே. 87

முறைகேட்கிலொன்பதுமுயற்சியால்வந்தது
துறைகேட்கிற்சர்ப்பத்திற்றுவக்கியமேகங்கேள்
கறைபூத்தகொங்கையாளுபகன்மோகத்தால்
மறைபோற்றுங்கர்ப்பத்தில்வளர்ந்ததுமேகமே. 88

வளர்ந்ததுகர்ப்பத்தில்வகுத்தமுறையஞ்சாம்
உளர்ந்தியவுந்தியிலுற்பத்தியாமேகம்
அழுந்திப்படும்வெள்ளையாகாச்சுரமேகம்
தளர்ந்திட்டவஸ்திபைத்தணலாயுருக்குமே. 89

தணற்காயுமேகந்தண்ணீர்ப்பகைமேகம்
உணக்கான்முழுக்கற்றூலுருகுஞ்சிலமேகம்
பிணக்காற்பசிகெட்டார்பெற்றபெருமேகம்
வணக்காற்கைசயோகத்தால்வருங்கடுமேகமே. 90

கடும்பசிதோணிடிற்காணுஞ்சிலமேகம்
விடும்பசிகாணிடிமேகங்களற்றுமே
அடுவுற்றிறையேருமஞ்சும்முன்னொன்பதும்
எடுவுற்றிருபத்தொன்றேற்றினர்மேகமே. 01

பித்தகுன்மம்.

ஏற்றியகுன்மம்எழுந்தவிதங்கேளு
தோற்றியபித்தமும்வாயுவுந்தொந்திக்கில்
சேற்றியவன்னஞ்செரிக்கில்வலிப்பேறும்
மாற்றியசேருரிலாத்தியாம்பாருமே. 92

### வாதகுன்மம்.

பாருமேவாதமும்வாயுவும்கூடிடில்
ஒருமேகும்பியிலுமூன்றுமிகநோகும்
கோருமேகுத்துங்குடலைமுறுக்கிடும்
வாருமேவாதத்தில்வழங்கியகுன்மமே. 93

### ஐயகுன்மம்.

வழங்கியவையமும்வாயுவுங்கூடிடில்
தழங்கியவன்னத்தைச்சந்திக்கவொட்டாது
புழுங்கியவன்னம்புளிப்புக்கொடுத்தேறி
உழங்கிமுறுக்கிவுடலைவலிக்குமே. 94

### மேககுன்மம்.

வலிக்கியமேகமும்வாயுவுங்கூடிடில்
டலிக்கியமலசலம்பதையாமற்கட்டிடும்
இலிக்கியவிடப்புறமியல்பாம்வலப்புறம்
வலிக்கும்முறுக்கும்வருஞ்சூலைக்குன்மமே. 95

குன்மமிவைநாலில்கூறிஞரெண்விதம்
வன்மையாநோய்க்குமகாநோய்காண்பொல்லாது
கன்மமேசெய்தகடத்துக்கிதுவெய்தும்
நன்மையாந்தர்மஞ்செய்நாட்டோர்க்கும்வாராதே. 96

### பித்தசூலை.

நாட்டியபித்தமாஞ்சூலைமுறைகேளு
மாட்டியவன்னம்ருசிகெட்டுவாந்தியாம்
ஆட்டியகைகாலதன்சந்துபின்றண்டு
நீட்டிவலித்துநிலையாயெரியுமே. 97

### வாதசூலை.

நிலையானவாதத்தினின்றிடுஞ்சூலைதான்
குலையானகைகாற்குளைச்செல்லாம்புண்போற்
கலையாய்வலித்துக்கனத்திடுங்கீழ்வயிறு
தலையானமேனிதானிளைத்திடுமே. 98

### ஐயச்சூலை.

இளைத்திடுமேனியிருமிவாண்டிடும்
குளைத்திடுகைகாற்குத்திமிகநோகும்
தளைத்திடும்மார்பிற்சளிமிகத்தாக்கிடும்
அளைத்திடுமையத்தாலாகாதசூலையே. 99

### வாதபித்தசூலை.

ஆகாதவாதமும்பித்தமுஞ்சூலையாய்
வாகானகைகால்வளமாய்க்கரடேறும்

தாகானமேனிதனில்வெடிப்புப்புண்ணுகும்
போகாமனின்றுபுணர்ச்சியாய்க்கொல்லுமே. 100

ஐயபித்தசூலை.

கொல்லியவையமும்பித்தமுங்கூடில்
மல்லியெனும்பில்வளமாய்த்தொளைத்துநோய்
அல்லிச்சுரங்காயுமதிகதாபமுமாகும்
எல்லியிருமிடுமிதுகாணுஞ்சூலையே. 101

ஐயவாதிசூலை.

காணுமேமையத்திற்கனவாதசூலைகேள்
பூணுங்கபாலம்புடைத்துவெடித்திடு
ஆணிமுளையாமடங்காக்குளிர்சுரம்
பேணியெனும்பெலாம்பெலன்கெட்டுநோமாறே. 102

ஆறுவகைச்சூலையிலமூன்றுபேர்சொல்வார்
வேறுமிதையல்லால்வெவ்வேறுமொன்றில்லை
கூறுமிதனுமங்கோடிதுணஞ்சொல்லுவார்
பேறுமறுசூலைப்பேர்சொன்னரெங்கந்தியே. 103

ஆறுவிதகர்ப்பநோயால் ஸ்ரீமலடு.

நந்தியுரைத்ததுநலமானகர்ப்பத்தில்
அந்தியநோய்தான்அறுவகைகேளு
புந்தியில்வாயுவுந்தேயுவுங்கூடிடில்
மந்திமலடாவாள்மரணவரைக்கென்னே. 104

மலட்டுப்புழுவால்மலடு.

வரையானகர்ப்பத்தின்மலட்டுப்புழுவிருந்து
விரையாஞ்சுக்கிலத்தைவிரைந்ததுவுண்டிடும்
கரையாமடியாங்காணதைப்போக்கிடில்
துரையானபிள்ளைசுகமாய்ச்செனிக்குமே. 105

செனிக்கின்றபிள்ளைத்திறமாய்ப்பிறக்கையில்
கனிக்கின்றசிநீர்கலந்துள்ளேசிக்கிடில்
பனிக்கின்றகைகால்பாவியேகுத்திடும்
தனிக்கும்பசிபோகுந்தான்வயிறும்பாரிப்பே. 106

பாரியவாய்வுபரிந்துகுழிப்புகில்
தாரிக்கழிந்துசதநித்தங்கூப்பிடும்
வாரியுடம்பெலாம்வலிக்குமிடைநோகும்
ஆரியன்சொன்னுனரிந்தவர்சித்தரே. 107

சிந்தானகர்ப்பத்திற்சேர்ந்திடுமிரத்தந்தான்
மாத்தாயுருண்டுவாயுபோலோடிடும்

உற்றபசிபோகுமுழன்றேயிரைந்திடும்
வற்றுக்கழிச்சலாம்வன்சூதகவாய்வே. 108

சூதானமாமிசஞ்சுழித்திடிற்கர்ப்பத்தில்
வாதானமேகத்தால்வழங்கிச்செனிப்பிக்கும்
போதாமுடமபெலாம்புண்போன்மிகநோகும்
நீதாமயக்கமாய்நிர்ச்சீவனே. 109

ஆகின்றநோய்களறுவிதங்காண்கற்பத்தில்
பாகொன்றிநின்றுற்பலியாதுகர்ப்பந்தான்
வாகின்றதைப்போக்கில்மலடிபெரும்பிள்ளை
ஆகின்றநோய்க்கெலாமறைந்தமுறைபாரே. 110

கற்பசன்னிகுணம்.

அறைந்திடற்சன்னிகளாகாதுகர்ப்பத்தில்
இரைந்திடுஞ்சீசினுட்புகும்வாயுவால்
விறைந்துமிகவெபர்க்குமெய்யின்மயக்கமாம்
துறந்திடபெற்கிட்டுஞ்சோம்பிக்கும்பாருமே. 111

பாருமேபெண்டான்பச்சுடம்பாங்காலம்
தாருமனுபோகந்தனிக்காடியுண்ணுதல்
அருக்குமாப்பண்டமாகாதுமாங்கனி
கோருமேகொண்டிடிற்கொண்டிடுஞ்சன்னியே. 112

கொண்டமலடிக்குக்கூறிடுஞ்சன்னிதான்
மண்டியிருக்கையின்மாத்தின்பாள்மோருண்பாள்
தண்டியணைவானிச்சூதக்காய்தின்பாள்
ஒண்டியபெண்களுக்கோரெட்டுச்சன்னியே. 113

ஓரெட்டுச்சன்னியுமுன்றதுபெண்ணுக்கு
வாரெட்டுமானுக்குமகத்தாஞ்சுகசன்னி
நேரிட்டுப்பார்க்கினிகழ்ந்ததுவெவ்வேறு
பாரொட்டுமெச்சப்பகுத்தமுறைபாரே. 114

கண்ணோய்.

பாரேபொச்சுடல்பருவெயின்மேற்படம்
வாரேறுகொங்கையாள்மாயைமிகச்செய்யல்
காரேமுழுக்கறல்கண்ணுலனல்பார்த்தால்
சீரேறுபாஷாணந்தின்றதாற்கண்ணோயே. 115

கண்ணோய்வருகின்றகாரணமின்னுங்கேள்
பண்ணுவமேகத்தாற்பருவெட்டைவாயுவால்
தண்ணுமலக்கட்டல்தண்கலக்கட்டினுல்
புண்ணுமிரணத்திற்போடுங்காரத்தாலே. 116

காரச்சுறுக்காற்கடுபிரசத்துமத்தால்
நேரொத்தசாரநிறைமூக்கின்வாசத்தால்
பாரொத்தபேதியாற்பலபலதண்ணீரால்
சீரொத்தகண்ணிற்சிறக்கும்வியாதியே. 117

குட்டநோய் பதினெட்டானகாரணம்.

வியாதியுண்மூவாறுவிளங்கியகுட்டங்கேள்
சுயாதிக்கிரந்திசுழன்மேகத்தாலாழும்
பயாதியமண்ணுணிப்பல்வண்டினுலெட்டி
நியாதிப்புழுநாலாய்நின்றிந்தக்குஷ்டமே. 118

கண்ணோய்மருந்து.

இந்துப்புத்திப்பிலிமியல்பீதரோகணி
நகதிப்புசாற்றினயந்தேயரைத்திட
அந்தகன்கண்ணுக்கருந்ததிதோன்றிடும்
நந்திக்குநாதனயந்துரைத்திட்டதே. 119

சுரம் தோஷம் சன்னி வாயு கர்ப்பசூலைதீர.

உரைத்தசுரம்போமுறவானதோஷம்போம்
விரைத்திடுசன்னிபோமேலானவாயுபோம்
பரத்தியர்கர்ப்பத்திற்பாய்கின்றசூலைபோம்
குரைத்தநற்சூதக்குருக்கூட்டிப்பார்த்திடே. 120

மேகநோயிருபத்தொன்றுந்தீர.

பார்த்திடுமேகம்பகரிருபத்தொன்றும்
போற்றிடுமப்பிரகப்பொலிவாளசிந்தூரம்
சேர்ந்திடும்சீந்திற்செவ்வாஞ்சருக்கரை
மாற்றிடுவெண்ணெயின்மாமேகம்போகுமே. 121

குன்மம் குஷ்டம் கிராணிமூலந்தீர.

போகுமேகுன்மம்புரட்டத்திராவகம்
போகுமேகுஷ்டம்புகட்டச்செயகெந்தி
போகுமேகிராணிபுகட்டநற்பூணகம்
போகுமேமூலம்புகழ்சங்கைச்செம்புக்கே. 122

சங்கைகேணெய்தான்றனித்தநாலாயிரம்
சங்கைகேணூற்றிருபத்தெட்டென்பர்காண்
சங்கைகேளிவ்வளவுந்தானுடலினுண்டாகில்
சங்கைகேளெல்லாந்தவிடுபொடியாமே. 123

சகலநோய்களுந்தீர குருச்சிந்தூரம்.

பொடியாநோய்போகப்புகன்றிட்டாரெந்நந்தி
மடிவானரூதமகத்தானதங்கம்

பிடிவானகெந்தியின்பேரானசத்துரு
குடியாய்சிந்தூரத்துக்கூட்டியேதின்றிடே. 124

தின்றிடநோயெல்லாந்திசைகெட்டேயோடிடும்
பன்றிடவாயுவும்பக்கத்திற்சேராது
தன்றிடலோகர்க்குத்தானுகாதிம்முறை
மன்றிடச்சித்தர்க்காமாவ்யாதிபோகவே. 125

வியாதிகள்போகவெகுநாட்சடமுறப்
பயாதித்திரைநரைபாங்காத்தவிர்ந்திடக்
கயாதிக்கவனங்கலங்கெதங்குஞ்சுற்றிட
அயாதியுஞான்மஞ்சாகுஞ்சித்தியே. 126

திருமூலநாயனார் அருளிச்செய்த
குணவாகடம் முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர்

அருளிச்செய்த

# வைத்தியசாரம்.

## கணபதி துதி.

வெண்பா.

சொல்வயித்தியசார சுருக்கமுப்பத்தாறும்
அல்லும்பகலு மறிவுணா - நல்ல
குணபதியாம்பூரணத்திற் கூடியேவாழும்
கணபதியின் பாதமலர் காப்பு.

## மருந்துகொடுக்கக்கூடாதபேர்கள்.

அன்னியதாரத்தாசை கொள்வோன்வஞ்ச னைகஞ்சாகள்ளு
லொட்டி னுண்டோன்றீமை, துன்னிய சூனியக்காரன் சண்டைக்
காரன் துரும்புகிள்ளி விருந்துண்பான் திருடன்துஷ்டன், குன்னிய
நித்திரைமிகுத்தோன் கொடாதலோபி குணமில்லான்மதியில்லான்
மானமில்லான், பன்னியபண்டிதர்பகைஞன் செவிடனூமை பாதி
பதமறியானைப் பார்க்கொணாதே. 1

## முன்னேபணம்வாங்கிக்கொண்டு பின்னே வைத்தியஞ்செய்யவும்.

கைச்சுலிகைபொப்புக் களவின்கூலி கபடமனமுலேமாதர் வேசிகூலி, மெய்க்கூலிகண்கூலிவித்தைக்கூலி வியாபாரக்கூலிமிகவுடையான்கூலி, ஒப்பரியபிணிதீர்க்குமொருவன்கூலி ஓதுவிக்குமுபாத்தியாயன்றன்கூலி, அப்போதைக்கப்போதேவாங்காராகில் ஆர்பெறுவாரார்தருவாரவனிமீதே. 2

## துஷ்டர்களுக்கிம்மூன்றுஞ் சொல்லக்கூடாது.

மந்திரமும்வாகடமும்பழையநூலும் வருவிக்கும்பெரியோரேவளமைகேளீர், தந்திரமாய்க்காந்தமுகமூசிபெற்றுந் தன்மையதுபோறதொடர்ந்து தரிப்பாராகில், சுந்தரமாம்புகழுடைய குலமாணுங் துஷ்டர்களுக்கிம்மூன்றுஞ்சொன்னாராகில், அந்தரமாயெழுநரகிலழுந்திப்பின்னு மறிவலார்சண்டாளராவார்பாரே. 3

## இந்நான்குவகைகளும் அறியாமல் வயித்தியஞ் செய்பவர்களுக்கு நரகம்வரும்.

பார்க்கின்றசோதிடபிராயகாலம் பகரும்விபகாரமொடுபிராயச்சித்தம், ஏற்கும்வைத்தியமிவைகள்நான்கும்வல்லோர், இதன்வழியேசிகிச்சைரெக்ஷை செய்வாராகில், ஆர்க்குமே தோஷமில்லையிவைகளையா அறியாதார்சாஸ்திரவல்லவர்கள்போல, தீர்க்கமடிபிடியாகச்செய்வாராகில் சீவபிரமத்திலதைசேர்வாரன்றே. 4

## கண்கள்-3-தலைகள்-4-முகங்கள்-5-கைகள்-6-சரீரங்கள்-8-கால்கள்-10-இந்த ஆறுவித குணங்களறியார் ரோகிகளைக் கொன்றதனால் நரகமடைவார்.

வாதுகுறிவைத்தியரே சொல்லக்கேளீர் வாகாககண்மூன்றுதலைகள்நான்கு, நீதமுடன்முகங்களைந்துகைகளாறு நிலைசரீரங்களெட்டுகால்கள்பத்து, வீதமிதன்பயனறிந்தார் வியாதிதீர்ப்பார் விதமறியார்மானிடரைப் பழியேசெய்வார், சேதமாஞ்செய்மருந்துபலித்திடாது செத்தபின்பு நிரகிற்சேருவாரே. 5

## கண்-தலை-கை-கால்-பிண்டநிலை-விபரங்கள்.

மருந்துசுத்திகுணம்நிகண்டுகண்கள்மூன்றும் வாதசிலேத்தயிட்டுமெதொந்தந்தலைகள்நான்காம், அருந்தும்அறுசுவையறிதல்கைகளாறும் அஷ்டவிதக்குறியறிதல்சரீரமெட்டாம், இருந்ததசநாடிதசவாய்விரண்டும் இதமாகப்பார்த்திடிற்கால்கள்பத்தாம், பொருந்தியதோர்பிண்டநிலைமுகங்களைந்தாம் பொதிகைமலையகஸ்தியனார் புகன்றவாறே.

வாகடத்தின்பயனறியார்நாடிகாணார் வளர்கையைப்பிடித்திழுத்து வார்த்தைசொல்வார், ஆகடியமாகவேநல்லோர்தம்மை அசாத்

யநோயோரென்று அறைந்துபோவார், பேர்கிடக்கப்பேர்சொல்வார் வியாதிகட்கு பிணிதீர்ப்போமென்றுசொல்வார் தீர்க்கமாட்டார், ஓகோகோவைத்தியர்தாமென்றுசொல்வார்க் கொருக்காலுமோக்ஷமில்லைநரகந்தானே. 7

அச்சமறவைத்தியரேநோயுள்ளோர்க்கு அசாத்தியமுஞ்சாத்தியமுமறிந்துநன்றாய், பட்சமறக்குறுகுணமெய்ப்பரிட்சைபார்த்து பரிகாரமாய்மருந்துபகராராகில், தச்சமறக்கிளைகுலங்கள்வேரோடற்று தரணிதனில்வெகுபாவந்தலைமேற்கொண்டு, இச்சைபெறவெழுநரகிவழுந்திப்பின்னும ஈடேற்றமில்லாமலிருப்பர்தானே. 8

தரணிதனிலவுஷதத்தின்சுத்திகண்டு தகைமைபெறநோயாளி சரீரம்பார்த்து, காநியாசனவகையுங்கண்டுபின்னும் கைப்பரிட்சை மெய்ப்பரிட்சைகருதுமநாடி, திரட்கரில்குருமுகமாய்ப்புத்தியாகித் தெளிந்தோர்கள் யோசனையுஞ்செய்திகேட்டு, முரணியினுலிந்தவகைசெய்யாராகில் மூவேழுசுறறமும்வேரறுப்போமே. 9

கருத்துறவேவாதிமகன் வைத்தியஞ்செய்யில் கசடறவேநோயாளிகுருவாயெண்ணி, கருத்துறவேமருந்துக்குப் பத்திவேணுங் கைகண்டவைத்தியனை யறிந்துநன்றாய், கருத்துறவே மனதுவரநடக்கவேணுங் கழுதையைப்போலிருந்தவர்க்குப்பலியாதென்றுங், கருத்துறவேயிவையறியச்சித்தர்தானுங் காட்டினாரவர்மனம்போல் நடந்துகொள்ளே. 10

நடந்துகொள்ளும்நோயாளிராஜாவாக நாட்டினுலவர்க்கங்கே மருந்தூணுது, தொடர்ந்துமேயவரிடத்திற்பத்திவைத்தால்துரும்பாகப்போகுமடாநோய்களேது, அடர்ந்துபோயவர்வாசற்காத்தாரானல் அக்கினியிற்பஞ்சதுபோல்நோய்கள்போகும், சடந்தனக்குநோய்வந்தால் குருவேயென்பார் சாதரியமாய்த்திரிந்தால் தம்பியாமே. 11

தம்பியென்பார்நோயெல்லாந்தீர்ந்தவின்பு தாய்தந்தைகுருவென்பார்திருமுன்னே, வெம்பியதோருரோகங்கள்தீர்ந்தபின்பு, தாய்தந்தைகுருவென்பார் திருமுன்னே, வெம்பியதோ ருரோகங்கள் தீர்ந்தபின்பு வேணவுபசாரம்பின்னுகட்டிடன்பார், கும்பியேகொதித்துமிகவுள்ளமவாடி குருவானவைத்தியர்தன் மனதுநொந்தால், தம்பியேமுகம்வாடித் தானவாரார்கள் சாற்றினேனிவையறிந்து மருந்துவாங்கே. 12

வஞ்சமற்றுரென்றபிணி யாளர்தம்மை மகவதிலும்பதின்மடங்குமருந்தசெய்யில், நெஞ்சில்நோயாளியின்பிணிநிதானம் நிறுத்துமந்தவைத்தியர்க்குநிதிகொடாமல், பஞ்சைமொழிபகருமரும்பாவியோரைப் பாழ்நரகிலழுத்தியெமன்பாசத்தாலே, அஞ்சவிழுத்தேயடித்துத்தள்தானென்று அகஸ்தியருமுந்நூலி லருள்செய்தாரே.

## பிண்டவுர்ப்பத்தி.

கேளப்பாமனமானவாயுகூடி கெடியானசித்தமகாகாயம்பொங்கி
வேளப்பா ஆங்காரசிகாரமிஞ்சி மேவுகற்குப்பெண்மேலேமோகமா
கும், நாளப்பாஐந்துக்கும்பலமேதென்றால் நலம்பெறவேசொல்லு
கிறேனன்றாய்க்கேளு, தாளப்பாமனதோடேவியானன்கூடுந், தனி
யானநாததிலபானன்றானே. 14

தானென்றவிந்துவினிற்சமானங்கூடும் தனியானசித்தமதில்
வியானங்கூடும், காலென்றஆங்காரங்கர்ச்சிப்போடே கலந்துநிற்
கும்உதானனப்பாகண்டுகொள்ளு, வேலென்றபத்துமொன்றாய்மன
துங்கூடி மேவியவன்கலந்துவந்துவிழுகும்போது, மாலென்றமௌ
னபரவசமேயாவன் மருந்தின்றபெண்ணுக்கம்முறைதான்கேளே.

## கருதரிக்கும்விதம்.

முறையானபெண்ணுணும்மௌனமுற்றால் மோசமில்லைகருவ
ங்கேதரிக்கும்பாரு, நிறையானவலத்தோடிலரணையாகும் கோராக
யிடத்தோடிற்பெண்ணையாகும், உறையானகருப்பையில்சுக்கிலம்
பாய வுத்தமனேசுரோணிதந்தானுறைந்துகொள்ளும், கரையாகப்
பாய்ந்தவெளிதமருபோலக் கழற்கொடிக்காய்ப்போற்றிரண்டுசிரசு
மாமே. 16

ஆமப்பாசிரசோடேகைபுங்காலும் அப்பனேதத்துவங்கள்நர
ம்புமுளை, ஓமப்பாஅஸ்திமுதலுரோமத்தோடு வுத்தமனேபதினொ
ருவாசலுமேகாணும், காமப்பால்விழுந்தவழிசிரசினாலே கைமுறை
யாய்த்தாயுண்டஅன்னஞ்செல்லுஞ். சோமப்பாநடுமையத்தொப்பு
ளாலே சென்றதெலாமலமாகக்கழியுந்தானே. 17

தாலென்றபதினொன்றற்சடந்தான்முன்னே சாதகமாயெடுத்
துவருமலடேவ்வாறு, ஊனென்றபெணணுக்குமனதுவேறாய் உருக்
கமுறவுமௌனம் உண்ணுப்பாவத்தாலே, காலென்றமலடாவாள்
புருஷனுக்குங் கைமுறையாயிப்படிதான்கண்டுகொள்ளு, தேனெ
ன்றமொழியாட்குப்பரனார்சொன்னார் செகமெலாமிப்படிதான்செ
னித்தவாறே. 18

## தசவாயுகளின்பெயர் பிராணவாயு யிருப்பிடம்.

பிலைத்துநிற்கும்பிராணனோடபானனெனும்வியானன் பிரியாவி
தானன்சமானனொடுகூர்மன், நலத்துகின்றநாகனெழிற்கிருகரன்று
ணரும் நற்றேவதத்தனொடுதனஞ்செயன்பத்தாகும், இருக்கமுடன்
பிராணநிலைமூலமதிற்றோன்றி யெழுந்துசிரசளவுமுட்டியிருவிழியி
ன்கீழாய், கலக்கமறநாவெழியோடும்சாறில் கடிகியெட்டுவெட்புகுந்
துக்கழியுமோர்நான்கே. 19

### அபானன் வியானன் உதானன் சமானவாயுகள்.

உந்தியெனுந்தலத்தின்கீழபானனின்று உறுமிமலசலங்களையுங்கழலச்செய்யும், விந்தையெழில்வியானன்றோளதனில்நின்று மிகக்களையுந்தவனமுமுண்டாகச்செய்யும், மிந்தஉதானன்செயலுண்டசனந்தன்னைப் பெருநாடிநரம்புவழியூட்டல்செய்யும், இந்தவுடல்தனைவளர்க்குஞ்சமானன்தானு மியாவையுமேமிஞ்சவொட்டாதிருக்குமென்றே. 20

### கூர்மன்-நாகன்-கிருகரன்-தேவதத்தன்-தனஞ்செயன்-வாயுகள்.

கூர்மனிருவிழியில்நிமைத்திடுமேநாகன் கொட்டாவிவிக்கலெனுங்கொடுமைசெய்யும், தீர்மைகிருகயனீட்டிமுடக்கிவைக்குந் தேவதத்தன்விழித்துமேவசனஞ்செய்யும், பேர்மன்னுந்தனஞ்சயன்மேற்சிரசிரண்டாய் பிளந்திடும்போததுவோடிப்போவதாகும், நேர்மையறிந்திடுவையினிநாடிபத்தின் நிலைமைதெரிந்திடவிபரமுரைசெய்வோமே. 21

### தசநாடிகளின்பெயர்கள்-சுழிமுனைநாடி இடகலை-பிங்கலை.

சுழிமுனையாம்இடகலைபிங்கலைகாந்தாரி தூயத்திசிகுவையலம்புடைபுருடன்றானும், நெழுகுருவன்சங்கினியோடீரைந்தாக நின்ற தசநாடிபத்தும்நிலைத்தநாமம், மொழிவதுகேள்சுழிமுனையென்பது மூலத்தில் முளைத்துநடுவெழுந்துசிரசளவும்நிற்கும், பிழிவழியாச்சுழிமுனையிற்கலைகள்தோன்றிப் பிறந்துயிருநாசியிடமோடிநிற்கும்.

### காந்தாரி-அத்தி-சிகுவை-அலம்புடை புருடன்-குருநாடிகள்.

கண்டமதில்நின்றுகாந்தாரிநாவில் கரைத்தநீர்பொசியவுபாயங்கள்செய்யும், அண்டசெவிதனிலத்திசிகுவைநின்று அவத்தையோர்நான்கினுக்குமூஊஎன்னும், விண்டஅலம்புடைபுருடன்இருவிழியில்நின்று மெய்மறந்தபோதுஅரைவாசிநிற்கும், கொண்டகுருநாடியீரடிப்பற்றிக் குடல்புரட்டிவாயினீர்சுழற்றிநிற்கும். 23

### சங்கினிநாடி விடையம் ஐந்தின்பெயர்கள் வர்ணவிடையம்.

சங்கினியென்பதுநாபிகுய்யம்பற்றித் தானிருக்குமொன்றையுமைமிஞ்சொட்டாமல், அங்கும்அதிகாரியனைம்பத்தொன்றும் அறிவித்தோம்வசனதிசைந்துங்கேளாய், இங்குவசனங்கமனந்தானத்தோடு இருந்தஎழில்விசர்க்கம்ஆனந்தம்ஐந்தில், பொங்குவசனதியவன்வாக்கில்நின்று பொருந்தவசனத்தையவன் பிறப்பிப்பானே. 24

### வியாதிகளை அஷ்டவிதப்பரிக்ஷைகளாலும் நிச்சயித்தறிதல்.

தாணியுள்ளவியாதிதனையஷ்டாங்கத்தால் தானறியவேண்டுமெதுவேதேதென்னில், திரணியதோர்நாடிகண்கள்சத்தத்தோடு தேகத்தினதுபரிசம்வர்ணம்நாக்கு, இரணமலமூத்திரமாமிவைகளெட்டும் இதம்படவே தான்பார்த்துக்குறிப்புங்கண்டு, பரனருளாற்பெரியோர்கள்பாதம்போற்றிப் பண்புதவறுமற்பண்டிதஞ்செய்வீரே.

### நாடிகள்நிற்குமிடங்களும் வாதநாடிநடையும்வருதலறிக.

செய்கின்றநாடிபெருவிரலின்மேலாய் திரநந்திழைமூன்றங்குலத்தினடுவதாகத், தைகின்றகோதும்பையரிசிபோல சர்வம்வியாபித்திருக்குமது தான்கூறில், கைபடியுங்காலடியும்நாடிநிற்கும் கன்னியருக்கிடப்புறமாங்கணவர்க்கங்கே, மைகின்றவலப்புறமாம்வாதநாடி வந்துமுன்னேநடக்குமப்பால்வகைசொல்வேனே.

### ~~பித்தம் சிலேட்டுமம்~~ வாதம் நாடி நடைகள்.

சொல்லுகின்றபித்தநாடிதோற்றுமப்பால் தொடர்ந்துசிலேட்டுமநாடிதோன்றுமப்பால் அல்லுநிறக்குழலாளேநாடிநின்றால், ஆச்சரியநாடியென்றறிந்துசொல்லு, மல்லுகின்றவாதத்தினடியங்கே வக்கிரகதியாய்நடக்குந்தவளைபோல, நல்லுகின்றமாழியட்டைதொட்டிலாட்டில் நல்லசயிப்படிநாடிநடக்குந்தானே. 27

### பித்தநாடி நடைசிலேட்டுமநாடி நடைவாதமும் பித்தமுந்தொந்திக்க நாடிநடை.

நடக்கும்பித்தமஞ்சவலப்பிள்ளைபோலும் நடனமயிலன்னம்போற்காகம்போலும், கிடக்குஞ்சிலேட்டுமநாடியிலங்கும்பட்சி செய்ப்புறாவூர்க்குருவி கோழிபோல, அடக்கமாய்நடக்குமதுமயிலேசொன்னேன் அவ்வளவேவாதபித்தியத்தின்தோற்றம், மடக்கின்றகாடைபோல்நடந்துபின்னை மஞ்ஞையெனநடக்குமதுமதித்துக்கூறே. 28

### வாதசிலேட்டுமந்தொந்தித்தநாடி அசீரணநாடி மத்ரிதயநாடி ரீசங்கைநாடி பலபந்தநாடி சன்னிவாதநாடிகளின் வருகை.

கூறுகின்றவாதசிலேட்டுமமுங்கூடில் கோழியட்டையெனநடக்குமசீரணநாடி, தூறுகின்றமத்திரிதயத்தினாடி தூங்குகின்றகாகநடையென்றுசொல்வார், தேறுகின்றஸ்ரீகங்கைஇப்படியாய்நின்றுதீபமாய்நடக்குமலபந்தநாடி, ஊறுமனனம்போலநடக்குஞ்சன்னிவாதம் உயர்நாடிவிதிதனையுமுரைக்கக்கேளே. 29

### குடிலைசூட்சமவாயு சன்னிவாதம் சங்கினிகாந்தா நாடிகளினடைகளறிக.

உரைத்தவிறகின்கட்டுக்குள்மூஞ்சூறு உலவுதல்போலேநடக்குங்குடிலைவாயு, விரைத்தெழுந்தேகமந்தமாயிருந்தபின்னும் விதமாகநடக்குமதுசூக்ஷமவாயு, புரைத்தருமையிவ்வகையின் சன்னிவாதம் பொருப்பாகக்குவிந்தமுலைப்போலுங்கொங்கை, முரைத்தெழுந்தச்சங்கினிகாந்தாரிப்பின்னே மூறைமையதாம் நாடியெனமுனைவர்தாமே. 30

### தேகங்களின் பரிசங்களுந் நிறங்களும் வருங்குறியறிதல்.

முனைகின்றதேகபரிசத்தைப்பார்க்கில் முன்வாதத்தேகிக்குச் சரீரஞ்சற்றே, அணைகின்ற உஷ்ணமாம்பயித்தியதேகிக் கதிகமுண்டாமப்பால்சீதளமாய்நிற்கும், சுனைகின்ற சிலேட்டுமந்தான்சூழ் தேகிக்குத் தொந்தகுணம்நால்விதமாய்நிறந்தான்கூறில், மனைவாததேகநிறங்கருத்துநிற்கும் பயித்யதேகநிறமஞ்சள்சிவப்பதாமே.

தாமேசிலேட்டுமதேகநிறம்வெளுப்பு தான்தொந்த தேகமிந் நால்விதமாய்நிற்கும், மாமயிலைசத்தமதுமறியவேண்டில் வாதரோகிசமதொனியாம்வார்த்தைபேசும், ஈமமுள்ளபித்தந்தானுரக்கக்கூறும் இயம்பிடுஞ்சிலேட்டுமரோகிக் கீனச்சத்தம், நாமுரைத்தோம் தொந்தரோகிக்குத்தானிந்த நால்விதமாய்மொழிந்தசத்தம்நடந்துகாணே. 32

காணுகின்றவாதரோகிக்குக்கண்கள் கருநிறமாய்நொந்துமிகத் தண்ணீர்பாயும், பூணுகின்றபித்தரோகிக்கு மஞ்சள் போலிருக்குஞ் சிவப்புநிறப்பொலிவுதோன்றும், பேணுகின்றசிலேட்மரோகிக்குக் கண்கள் பீளைகட்டிவெளுத்திருக்குஞ்சன்னிவாதம், வாணுகின்ற சிவப்புடைத்தாய்வந்துவீங்கி வருதிடுங்காமாலையென வகுத்துச் சொல்லே. 33

### வாதமலம் பித்தமலம் தொந்தமலம் வாதச்சிறுநீர்நிறங்கள்.

வந்தமர்வாதரோகிக்குத்தானும் மலமிறுகக்கட்டுபட்டுக்கறுத்துத்தோன்றும், திந்துபித்தரோகிமலமஞ்சளாகில் சிவப்பாகில் சேர்ந்திருக்குஞ்சிலேட்மருக்கு, சொந்தமலம் வெளுத்திருக்கும் மலக்கட்டானத தொந்தர்மலம்பலவிதமாய்த தோற்றிக்காணும், விந்தமுளவாதரோ கிச்சிறுநீர்தானும் வெளுத்திருக்கும்பயித்திய நீர்விதஞ்சொல்வேனே. 34

### பயித்தியர்சிறுநீர் கபநீர் தொந்தநீர் வாதரோகநாவு பித்தரோகநாவுநிறங்கள்.

விதமுள்ளபயித்தியர்தன்சிறுநீர்மஞ்சள் விதமுடைத்தாயிருக்குமல்லாமல்சிவப்பந்தோன்றும், நுரையுள்ள சிலேட்டுமத்தோர்

நீர்தான்மெத்த நுரைகலக்குந்தொந்தநீர் நால்விதமாய்க்காணும், சுவையுள்ளநாவிநிறஞ்சொல்லில்வாதந் தோன்றினர்க்கு வெடிந்து முட்போற்கருத்திருக்கும், கறையல்லச்சிவந்தாலும் பசித்தாலுந் தான் கனமுள்ளப்பயித்தியர்நாகணக்குத்தானே. 35

கபரோகநாவு ஜன்னிரோகநாவு தொந்தரோகநாவு.

தானமெடுவாய் வெளுத்துநீருண்டாகிற் றன்சிலேட்மநாவா குஞ்சுரம்அற்றே, ஆனமுறம்போற்முருக்கில் சன்னிரோகநாவாம் அதமதொந்தநாதிறம்சால் விதமாய்த்தோன்றும், ஆனவிவ்வகை யெட்டுமறிந்தபேரை அவனிதனிற்பண்டிதரா யறியச்சொல்வார், ஈனமிலாப்பொறியடக்கும் பெரியோரன்றி யெய்தாதுயாவருக்கு மியம்புங்காலே. 36

அகஸ்தியமுனிவர் அருளிய
வைத்தியசாரம் முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர்

அருளிச்செய்த

# நோயின்சாரம்.

கணபதி துதி.

வெண்பா.

கரிமுகக்கடவுளை கௌரிமைந்தனை
விரிகடல்வாயனை வேதவேதாந்தனை
அரிதிருமருகனை யாதிசோதியைப்
பரிவொடுதொழுதவர் பாதம்போற்றுவாம்.

மாதங்களில் நாடிபார்க்குங் காலமறிதல்.

சித்திரைவைகாசிக்குஞ் செழுங்கதிருப்பிற்பார்க்க
அத்தமாம்ஆனியாடி யைப்பசிகார்த்திகைக்கும்
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதைமாசிக்கும்
வித்தகக்கதிரோன்மேற்கே வீழ்கும்வேளையிற்றன்பாரே. 1

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
வானமாம்புரட்டாசிக்கும் அர்த்தராத்திரியிற்பார்க்க

தேனெனமூன்றாடி தெளியவேகாணுமென்ற
கானமாமுனிவர்சொன்ன காரிகைவேதநூலே. 2

நாடிபார்க்கிற் பலித்திடகாலமறிதல்.

எண்ணெயின் தலையின்போதும் ஈரமாய்நின்றபோதும்
உண்ணும்கல் லுண்ணின்போதும் உண்டாமவெப்பசியின்போதுந்
திண்ணமாய்நடக்கும்போதுஞ் சிற்றின்பமூட்டும்போதும்
பண்ணியநாடிபார்க்கிற் பலித்திடாதென்றுசெப்பே. 3

நோய்நாடிபார்க்கும் விபரமறிதல்.

மருவிடுநோயிநாடி மதித்திடில்வலக்கைமைந்தர்க்
கரிவையர்க்கிடக்கைதன்னி லழுத்திடேசுட்டிக்காட்டும்
விரலதில்வாதமாகும் மிருநடுவிரலிற்பித்தந்
தருமணிவிரலில்ஐயந் தானியல்பறிந்துபாரே. 4

வாதமும்பித்தமைய மருவியகுணபாடத்தைத்
தீதறமுனிவர்நூலைத் தேர்ந்தபின்திரட்டதாக
ஓதியசுருக்கநூலை யொழுங்கொடுவுணர்ந்துகொள்ள
வாதுநிர்வயித்தியர்க்கு வல்லிருள்விளக்கமாமே. 5

மந்தசுரக்குணம்.

வாதந்தான்தனித்துநின்று வந்திடும்பந்துபோலத்
தீதறவெழும்பிநின்றுந் திக்கியேமந்தம்பற்றும்
ஏதுவார்சுரங்கண்ட நிடைவிடாநிற்குமல்லால்
தாதுவுங்குறைந்துநின்று தன்னையுமறக்கச்செய்யும். 6

மத்தியசுரம் மலைச்சுரங்களறிதல்.

உற்றிடும்வாதநாடி பொருவிரலுள்ளேநின்று
பற்றியேசிறுயபிநின்று பையவேநடக்குமாயின்
மத்தியசுரமேயாகும் மலைச்சுரமதானபின்
அத்தியேமற்றியோடி யடங்கிடாதெழும்பிநிற்கும் 7

சகலசுரங்களும் பாஷாணத்தாற்றீரும்.

இப்படிசுரங்கள்கண்டா லெளிதல்லவேகமுண்டாய்
அப்பறநாவலண்டக் காருளிற்பிளப்புக்காணும்
வெப்புறுமிச்சுரங்கள் மேவிடாதகலவேண்டில்
மெய்ப்படிப்பாஷாணத்தால் மீள்வதுதிண்ணந்தானே. 8

வனமூலிகஷாயம் மாத்திரைகற்பம் இவைகளாற்றீரும்.

நாட்டிலிற்சுரங்கள்கண்டு நலம்படாதிருக்குமாயிற்
காட்டிலில்முட்டியாலுங் கஷாயத்தின்வலிமையாலும்
மூட்டியகுளிகையாலும் முடுகியகற்பத்தாலும்
வாட்டமாமென்றுநூலோர் வழுத்தியகுணமிதாமே. 9

மலபந்தநாடி.

வந்திடும்வாதநாடி மடங்கியேபதுடித்துநிற்கில்
மூர்த்தியபழமலங்கள் மூடுகியேசிக்குமெங்க
அத்தமாய்வாதந்தம்பித் தனிழ்ந்துநின்றமைக்குமாகிற்
பத்தியாய்வயிற்றெரிப்புப் பிசப்பும்வந்தடுத்ததென்னே. 10

மந்தசன்னி.

*சீருறும்வாதநாடி நின்றநிற்கோபமானாற்
பாரினிலெவர்க்கும்வாயு பற்றிடுமந்தமாகும்
வேரிசேர்குழலாய்வாகம் விரிப்பொடுபெடுத்துநின்றால்
கூறுமசன்னிவந்து கூடிடுமூன்றுநாளில். 11

ஷெடி ஜன்னிதீர அண்டத்தயிலம்.

வந்திடுமூன்றுநாளில் வாதமாஞ்சன்னிகூடிற்
புத்தியைமறந்துவாயாற் புலம்பவேவாடலம்பற்பண்ணும்
பித்தியநாலாநாளிற் பிடரிபிறபின்னல்செய்யும்
அத்தமாகியஅண்டத்தின தயிலமேபுகற்றிடாயே. 12

தோஷக்குறியறிதல்.

பரவியவாதநாடி பக்கமேதுடியாவண்ணம்
புரவிபபுழுப்போலூர்ந்து புலன்கெடவதிர்ந்தேபோடில்
சரமுறமேழாநாளிற் றோஷம்வந்தணுகாவை
யுரமுறப்பேசவொட்டா துளரியேகுளரிநிற்கும். 13

ஷெடி தோஷத்திர மயிலினெய்.

பேச்சதுகுளரிநின்று பெருகவுன்மூச்சமுண்டாம்
ஆச்சபன்னிரண்டுநாள்தா னெப்படிகிடக்கிற்பின்பு
கூச்சநமயிலினெய்யிற் குலவியவசப்புகூட்டித்
தேப்சமேலுள்ளங்கொள்ளத் தோஷமுஞ்சித்திப்போமே. 14

வாதமெலிவுதோஷம்.

வாதமேமெலிந்துவிம்மி வரண்டதுபுறண்டுதத்தி
சேதமாயானைவால்போற் சிக்கியேபதுடித்ததாகில்
வானதயேபெருகிமேவில் வந்திடுந்தோஷந்தானென்
றோதினோர்முன்னோரித்த வுகைமையைக்கண்டுச்சொல்லே. 15

சர்வாங்கவாசன்னிக்குணம்.

கூதிட்டவாதநாடி கோழிபோற்கிண்டிநின்றால்
வாரிட்டமுலைகல்லானே வாதமாஞ்சன்னியாகும்
பேசிட்டெடுத்தெடுத்துப் பிரப்படத்தியங்குமாகில்
ஆசிட்டதேகத்துண்டா மதுசருவாங்கமாமே. 16

மேற்படி நோய்தீர மருந்து.

பதறியவாதநாடி யாய்பரிபோலேவாடிற்
சிதறியமூன்றுநாளிற் சேர்ந்திடுங்குதிரைவாலி
மதறியாய்த்தொண்ணூறுறு நாழியில்மரிக்காவிட்டால்
விதரியாய்வேம்பினெண்ணெய் விஷமுஷ்டித்தயிலங்கூட்டே. 17

வாதக்கதிப்பால் வருநோய்கள்.

வாதமேகதித்தபோது வாயுவுமெழுப்புங்கண்டீர்
வாதமேகதித்தபோது வந்திடுஞ்சனனிதோஷம்
வாதமேகதித்தபோது வந்திடுமவியாதிமேலும்
வாதமேகதித்தபோது வல்லுடல்மெலித்துக்கொல்லும். 18

இருநாழிகையிலும் ஒருநாழிகையிலுஞ் சாகுங்குறி.

மந்தமாய்வாதநாடி மயிருரும்பேன்போலோடில்
இந்தமானிடர்க்கிரண்டு நாழிகையிருப்புமில்லை
வந்தவன்முகமும்வேர்ந்து மஞ்சளினிறமெய்யாகில்
முந்தவோர்நாழிகைக்குள் முடிவதுதிண்ணந்தானே. 19

தனிவாயுநோயும் வலிகுன்மமும் மரணமும் வருங்குறி.

வாதந்தான்தனித்துநிற்கில் வாயுவுந்தனித்துநிற்கும்
வாதந்தானுதறிநிற்கில் வலிகுன்மம்வந்துசேரும்
வாதம்தானற்றுநிற்கில் மரணமும்வந்துசேரும்
வாதத்தின்திரட்டதெல்லா மிவ்வகைவடிவுதானே. 20

கர்ப்பந்தரித்த நாடிகுணம்.

காரிகைதமக்குப்பிள்ளை கருப்பையைப்பற்றிநின்றுங்
கூறியவாதநாடி குண்டலப்புழுப்போலூரும்
வீரியமூறுந்திங்கள் விட்டில்போற்பதைத்துநிற்கும்
பாரியயெட்டாந்திங்கள் பையவேபொழுப்போலூரும். 21

மாதர்கைப்பிடித்தபோது வந்திடும்வாதநாடி
தீதுறவெடித்துப்பாய்ந்து சிதறியேசிலும்பிநின்றுற்
பேதைதன்வயிற்றினுள்ளே பெருசுரோணிதமேதங்கி
வாதைகள்பண்ணிமாத விடைகாலம்விருத்தஞ்செய்யும். 22

கர்ப்பந்தரிக்கக் குழம்பு.

இடுப்பொடுகடுத்துநொந்து யிடைவிடாக்குத்தலுண்டாய்
தடுத்திடாக்கர்ப்பந்தன்னைத் தங்கிடாவண்ணஞ்செய்யும்
அடுதததோராவினெய்யி லானதோர்திருகுகள்ளி
கொடுத்திடாத்துமட்டிக்காயின் குழம்பதுகொடுக்கத்தங்கும். 23

### சூதகத்தில் வாயுதங்கியகுணம்.

மாதர்கைபிடித்தபோது வந்திடுநாடிமூன்றும்
சேதமாயிற்றுநின்று சேரவேபதிந்துநிற்கில்
ஓதுமேசூதகத்தி லோங்கியவாய்வேநின்று
பேதமாய்வாதைபணணி பிணிகளைவிளக்குந்தானே. 24

### எரிகுன்ம வரலாறும் தீருமருந்தும்.

வாதமும்பித்தங்கூடி வன்பெலத்துடனேயோடித்
தீதருவயிற்றினுள்ளே திரண்டதோர்பந்தம்பற்றி
வேதனையெரிப்புங்கூடி விரண்டிடுமெரித்தகுன்மம்
ஆதிசேர்சீனிகூட்டி அஷ்டசூரணந்தான்கொள்ளே. 25

### சூலைநோய் வரலாறு.

திருத்தமாய்வாதத்தோடே தீங்கொடுபித்தஞ்சேரிற்
பொருப்புகள்தோறுந்தொந்த போதவேபிடிக்குஞ்சூலை
பெருத்திடாவாயுகொன்றும் பேசியவயிறேபோகுங்
கருத்தினாலறிந்துநன்றாய்க் கண்டிடாய்மனிதர்க்கெல்லாம். 26

### காலன்பிடிக்கும்நாடி.

அறவின்றநாவைப்போல அடிக்கடியுதறிவாதம்
உரம்பெறநின்றபித்தம் ஓடியேயொளிக்குமாகிற்
றிரும்பிடாக்காலன்றானே தீங்குடன்பிடித்தானென்று
வரம்பெறுமுனிவர்தானு மவர்கொடுசென்றார்தேர்ந்தே. 27

### மூலாதாரவாதையாற்சாதலும் பயித்தியம்பிடித்தலுமறிக.

பிறந்திடும்பித்தநாடி பிரண்டுமேநிற்குமாகில்
வறண்டிடுமூலாதாரம் வாதையால்மடிவுசெய்யும்
சுறண்டதுபித்தநாடி கதிப்பொடுதுடித்துநின்றால்
இறண்டிடும்பயித்தியம்தான் அடைவொடுவந்துகூடும். 28

### பேச்செழும்பலும் அடங்கலும் குளறலும் வருகை.

உற்றிடும்பித்தநாடி யொழுங்கொடுவெழும்பிநின்றால்
வற்றிடாப்பேசுகின்ற வசனமுமெழும்பிநிற்கும்
மத்திமப்பித்தநாடி மடங்கியேதுடித்துநின்றால்
உத்தமப்பேச்சுதானு மொடுங்கிவாய்குளறிப்போகும். 29

### பயித்தியநோய்வரலாறும் தீருமருந்தும்.

பித்தமாம்நாடிதானே பெலத்தொடுதனித்துநிற்கில்
மத்திமப்பயித்தியத்தை வளர்த்திடும்வறட்சிசேரும்
உத்தமமூளைதன்னி லுருகியேகுறைந்துநிற்கும்
சிற்றாமுத்தாடுமெண்ணெய் சிரசிற்றேய்த்தாற்போமே. 30

### இறுகிறுப்புத்தீரக் கஷாயம்.

உதறியேபித்தநாடி உழுவைப்போற்றுடித்துநிற்கிற்
பதறியேயுடம்பழுத்தும் பாய்ந்திடுஞ்சிறுநீர்மற்றும்
முதலியபுந்திமாறி இறுகிறுத்தழலையுண்டாம்
நிதவியபயறும்பச்சை நெல்லிக்காய்கஷாயங்கூட்டே. 31

### சுரத்தொடு கபாலக்குத்துவரலாறுந் தீரும்புகையும்.

நடுவிரற்பித்தமற்று மந்தமாய்நடக்குமாகில்
வடிவளவுடம்பழுத்தி மந்தித்துச்சுரமுந்தோன்றி
இடியிடித்ததுபோலோடிச் சிரசினிவிடித்துக்குத்தும்
படியவேசாதிலிங்கப் புகையுண்ணப்பறந்துபோமே. 32

### வறக்ஷிசுரம் பிரயோகம்வரலாறு.

வளர்ந்திடும்பித்தநாடி வலமிடபிசகாவண்ணம்
பிளந்தது தனித்துப்பச்சைப் பழுநுடங்கதுபோலோடில்
உளந்தனில்வறக்ஷிதங்கி யுடம்பலாந்தஸ்திதன்னில்
வளைந்திடுஞ்சுரங்கள்வந்து வளர்பிறமேகமாமே. 33

### மஞ்சள்நிறநீர்க்கடுப்பு உடல்வளர்ச்சிதீர வங்கபற்பம்.

சவநிறமஞ்சள்போலாய் கடுத்திடுந்தளர்ச்சிசெய்யும்
உலவியமுன்றுபாதம் பழகிற்பின்னுடம்புதன்னிற்
குவலியவங்கபற்பம் கொடுக்காமனுருமாகில்
விலகிடாச்சூலைவந்து வெடித்துப்புண்ணாகுமென்னே. 34

### பித்தத்தாலுண்டாகும் நோய்கள்வருதலறிக.

பித்தமேதனித்தாற்சூடு பெலத்துடனுலரச்செய்யும்
பித்தமேமிகுந்தாலீளை யிருமலும்பெலுத்துநிற்கும்
பித்தமேமிகுந்ததானாற் பெலன்குறைந்துடம்பழுத்தும்
பித்தமேதிரட்டிநூலிற் பேசினார்பெரியோர்தாமே. 35

### பெருவாதம் உதரவாயுபயித்தியமுதலான பிணிகளுற்பவித்தல்.

பித்தமேகதித்தபோது பெருத்திடும்வாதமுண்டாம்
பித்தமேகதித்தபோது பெருத்திடும்வயிற்றில்வாயு
பித்தமேகதித்தபோது பிதற்றிடிற்பித்தேகேளு
பித்தமேகதித்தபோது பிலந்திடும்பிணியநேகம். 36

### சன்னிவாதம் பினத்தல் பித்தல் நினைவிழிப்புவருகை.

பித்தந்தான்வாதத்தோடு பிணைந்துநேர்தோன்றுமாகில்
மத்திபசன்னிவாதம் வந்திடும்பினத்தலுண்டாம்
உற்றிடும்வாதத்தோடு வுதவதாய்பித்தமீறில்
நித்தமும்பிதற்றிப்பேசி நினைவிழிந்திருப்பரென்னே. 37

### மேற்படிநோய்கள்தீர மருந்தும் க்ஷயரோகமும்வரலாறு.

முற்றுமீக்குணங்கள்கண்டால் முபிறதன்முட்டைதன்னை
கத்தபப்பாலினோடுங் கலந்தருந்திதமாம்பின்பு
பித்சந்தானைபத்தோடு பெருமூசக்திரும்பிநிற்கில்
மத்திபக்ஷயரோகத்தை வாவெனவழைக்குந்தானே. 38

### சீழும்விடாத சுரமுங்காணும் சயரோகந்தீரக் குக்கிலாதி செய்புஞ்சாறும்.

இருமியேசீழும்வீழ்ந்து யிடைவிடாச்சுரமுங்காயம்
பருதமாய்நெஞ்சிற்பற்றி பதறியேயிரத்தம்வீழும்
குருசிலைக்குக்கிலாதி கிருதத்தாற்குடிபோம்பின்பு
வருநெறிகண்டந்தோடை வளையதனீரைக்கொள்ளே 39

### அசாத்தியசுரநாடிக்குறியறிதல்.

ஐயமாம்நாடிதானே யரணைவாலாற்றுநேர்ந்து
பையவேமந்தம்பற்றிப் பதறிடாதிருக்குமாகில்
செய்வதொன்றில்லாக்காலன் தேடுவதுண்மையென்று
கையினைப்பிடிக்கவேண்டாங் கழற்றிக்கொண்டப்பாற்சொல்லே. 40

### இருமலிளைபிளப்புகோழைதீர.

உற்றிடும்ஐயநாடி யோங்கியேதுடித்துநின்றாற்
பற்றிடுமிருமலீளை பதறியேபிளப்புண்டாகி
மெத்தவேகோழைவாயு மிகுத்திடிற்கற்கத்தோடு
சுத்தமாம்தூதுவேளை தோடைநககண்டங்கூட்டே. 41

### தொண்டையும்நெஞ்சுங்கட்டிமழைகாலத்திலுபாதித்தல்தீரக் குக்கிலாதிநெய்.

இதமொடுயிறுதிநாடி யிளகிடாதிருகிநின்றாற்
பதமொடுதொண்டைகட்டும் பழுத்துநெஞ்சதனிற்கட்டும்
விதமொடுமழைநேரத்தில் மிகுதியாய்வாதைபண்ணும்
நிதியெனக்குக்கிலாதி நெய்யினால்மாறுந்தானே. 42

### பீனசம் மூக்குநீர்ப்பாய்ச்சல் மண்டைச்சீலை தலைகனப்புத்தீர நண்டுநெய்.

ஒடுக்கமாஞ்சிலேட்டமநாடி யொழுங்கொடுபதறிநின்றால்
ஒடுக்கமாய்பீனசங்கள் நாசிநீர்ப்பாய்ச்சலாகும்
பிடித்திடுமண்டைச்சூலை பெருத்திடுந்தலைகனப்பு
தடுத்திடும்நண்டுநெய்யைத் தலையினிற்றடவத்தீரும். 43

### ஓர்பகலுக்கு ளிறக்குநாடிக்குறி.

மத்திடஐயநாடி மந்தித்துவுழன்றுநின்று
முத்தியயீசல்போல முடிகிலேயபதறுமாகில்
நித்தத்தோர்பகலுக்குள்ளே நில்லாதுமரணம்வந்து
சுத்தியேவரிப்பரென்றே சொல்லுவார்நல்லோர்தாமே. 44

### குத்தங்கோழைவாயுமரணநிச்சயக்குறி.

சிலேட்டுமநாடிதானே தெளிவொடுநிற்கிற்றீதாம்
சிலேட்டுமமந்தம்பற்றில் சேர்ந்திடுங்கோழைவாயு
சிலேட்டுமமிகுந்துமின்றால் செப்பிடுமரணந்திண்ணம்
சிலேட்டுமத்திரட்டதெல்லாந் தெளிவொடுகண்டுகொள்ளே. 45

### சாகுங்குறியறிதல்.

ஐயந்தான்பித்தந்தன்னை யனைத்தேதுத்தேறுமாகில்
நையவோர்நாளிற்காவன் நாடியேவருவதுண்மை
மையவேஐயம்பார்த்து வாதத்தைப்பற்றிநின்றாற்
செய்யும்வாறென்னசாவோர் நாழிகைதிண்ணந்தானே. 46

### வியாதிதோஷம் ஐயசன்னி மரணங்கள்வருகை.

ஐயமேகதித்தபோது அணுகியேவியாதியுண்டாம்
ஐயமேகதித்தபோது அறிந்திடுந்தோஷமாகும்
ஐயமேகதித்தபோது ஐயமாஞ்சன்னியாகும்
ஐயமேகதித்தபோதவ் வையமேமெலிந்துகொல்லும். 47

### சரீரக்குத்தலும் நெஞ்சுநோக்காடுமாய்க்காணுமேகமறிக.

பார்த்திடுநாடிமூன்றும் பதிந்ததும்விந்துநிற்கில்
தோத்திடுமேகமுள்ளே தோன்றியேபொருந்திமெய்யில்
ஆத்திடாக்குத்தலுண்டா யதனொடுநெஞ்சும்நோகும்
தேத்தமாயிகுணங்கள் தெளியவேயறிந்திடாபே. 48

### பிணிவாராமையும் வருகையுமறிக.

வாதபித்தையமூன்றும் வன்பவத்துடனேதத்தம்
பேதமொன்றில்லாவண்ணம் பேசியகாலத்தன்னில்
நீதியாய்நிலைத்துநின்றால் நெடும்பிணிசிக்கவில்லை
தாதுவுமொன்றோடொன்று தாவிடிற்பிணிகள்தானே, 49

### கழல்வாதம் மூலம் சாவு வாழ்வுவருகை.

மூவரும்உரத்துநின்றால் மூலர்ந்திடுக்கழல்வாதங்கள்
மூவருமந்தமானால் மூளைத்திடுமூலமெல்லாம்
மூவரும்பதுங்கிநின்றால் முடிவதுதிண்ணங்கண்டாய்
மூவருந்தன்தன்காலத் துதித்திடில்வாழலாமே. 50

### ஆறுமாதத்திற் சாகுங்குறியறிதல்.

காலையின்மூன்றுநாடி கதிப்பொடுநடக்குமாகில்
வாலையாமுச்சிகாலம் வன்பித்தமமூழ்ந்துமாகில்
மாலையில்வாசந்தானும் ஐபத்திலுறையுமாகில்
நீலகண்டத்தாரானை நிலச்சாவுமாதமாறே. 51

### மலசலஅடைப்பும் விடுப்பம்வருதலறிக.

பெருவிரலிரண்டுபக்கம் நாடிதான்பிசகியோடில்
மருவியமலசலங்கள் மந்தித்தேயடைத்துக்கொள்ளும்
பெருகலையடிவயிற்றிற் பிடித்துமேலெழுப்புமாகில்
தடையில்லைமலசலங்கள் தானதுகழன்றுபோமே. 52

### தொப்புளில் மலம்ஜலம் வாயு இடதுசந்து இடதுமுதுகு இறுத்தலறிக.

நடுவிரல்வலதுபக்கம் நாடிதானடக்கும்போது
மடையதாமுந்திதன்னில் மலஞ்சலம்வாயுசேரும்
வடநிலைமுலையின்மாதே வாகொடுபிடதுசந்து
இடமுதுகழுத்திற்ப தென்பதுமுன்சொன்னோமே. 53

### தொப்புளின்கீழே ஐபமும்பித்தமுஞ்சேறுங் குணமறிக.

நடுவிரலிடதுபக்கம் நாடிதானடக்கும்போது
அடைவொடுவுந்தியின்கீ ழையொடுபித்தஞ்சேரும்
கடகரியுரித்தோன்றன்னைக் கருத்தினிலிருத்திக்கொண்டு
வடுவறநாடிபார்த்து வந்தநோயறிந்துசொல்லே. 54

### கால்கைவலிப்பு உடல்நோக்காடுமாய்வருஞ் சூலைநோய்க்குறி.

சிறுவிரலிரண்டுபக்கம் நாடிதான்சிதறியோடில்
மருவியகாலுங்கையும் வலிந்துடல்மிகவேநோகும்
ஒருபொருளாகிநின்ற வுமையொருபாகம்வைத்த
திரிசடைசிவனைநோக்கிச் செப்பினேன்சூலையாமே. 55

### சூலைநோய் கசத்தவாய்நீர் மயக்கம் வாந்தி அடிவயிற்றுச் சூலைவருகை.

மோதிரவிரலிடத்தே முடிகியேநாடியோடில்
காதியுங்குலைநோய்கண்டாங் கைத்திடும்வாய்நீரூறும்
வாதியானருளினாலே மயக்கமும்வாந்தியுண்டாம
ஆதியேயடிவயிற்றிற் சூலையுமமர்ந்திருக்கும். 56

கால்கைகடுப்பு சோபம் உந்திநோய் தலைவலிவருகையும் சிகிச்சையுமறிதல்.

மோதிரவிரல்வலத்தே முடிகியேநாடியோடில்
கால்களுங்கைகளுந்தான் கடுத்துப்பின்சோபமாகி
ஓதியேயுந்திநொந்து வுதிதியாய்த்தலைவலிக்கில்
ஆதியானருளினாலே யவர்கட்குவசியம்பண்ணே. 57

2-ம்-நாளிலும்-8-ம்-நாளிலுஞ் சாகுங்குறி.

வெள்ளசீரோடும்போல சிலேட்டுமமீறியோடில்
வள்ளல்வாணறியச்சொன்னே மரிப்பதுமற்றுநாளில்
தெள்ளியேவாதத்தாலுஞ் சிதறியேயோடியாகில்
உள்ளியநாலோரெட்டி லுறுதியாய்ச்சாவாரெனனே. 58

3-நாள்-15-நாள்-40-நாளிற்சாகுங்குறி.

பித்தமிப்படியேயோடிற் பிதற்றிநாள்மூன்றிற்கொல்லும்
முத்தியவாதபித்த முயங்கியப்படியேயாடில்
பற்றறச்சொன்னேன்கண்டீர் பதினைந்துநாளிற்கொல்லும்
சுற்றியஐயங்கூடில் நாற்பதுநாளிற்கொல்லும். 59

உடனேயும் 3-மாதத்திலுஞ் சாகும்நாடிக்குறி.

அரணைவாற்றுடிபோலோடி லாங்கவன்பிழைப்பதில்லை
பாவுதேட்கொடுக்குப்போலும் பதைத்திடிற்சாவுதிண்ணங்
கரைபெறும்பதுபோலோடிற் கண்டிடாய்த்திங்கள்மூன்றில்
வரையணிமுலைநல்மாதே மரணமென்றறிந்துகொள்ளே. 60

மரணநாடிக்குறியறிதல்.

ஐயமாஞ்சிலேட்டுமத்தி லாகியநாடிதானும்
தொய்யவேதவளைபோலத் தொடங்கியேகுதித்திட்டாலும்
பையவேபுரண்டுபுத்துப் பாம்பெனநடைகண்டாலும்
மைசெறிகுழலினாளே மரணமென்றறிந்துகொள்ளே. 61

ஒருமாதத்திற்குச்சாகும் நாடிக்குறி.

தேனெனத்தெரித்துச்சற்றே திரிநாடிசெய்யுமாகில்
மாளவேமரணவாதை வந்திடுஞ்சன்னியுண்டாம்
மீளுவதில்லைமுன்னாள் விதிப்படிவந்ததீது
நாளறிதிங்கட்குள்ளே நாசமாய்க்கொல்லுந்தானே. 62

இரண்டரைநாளிலும் எட்டுநாளிலுஞ்சாகும் ஐயநாடிக்குறி.

புரண்டதுவுருண்டுமேலே பொருந்திசீர்நடக்குமாகில்
இரண்டரைநாளினிற்று னியல்பதாமரணமென்க
சுருண்டமென்குழலினாளே சொல்லிநாளெட்டினிற்றன்
மரணமேவருகுமென்று வாகொடுவழங்குவாயே. 63

### மரணநாடிக்குறியறிதல்.

கண்டவிற்றுடுப்புமுண்டு கடியமுவிரலையூன்றில்
விண்டையம்வாதம்பித்தம் மேவியேநாடிமூனறும்
ஒண்டொடிமாதேகேளா யுயர்ந்ததோர்தோற்றமாகு
மண்டியேயெழுந்துபாயில் மரணமென்றறிந்துகொள்ளே. 64

### ஒருமாதத்திற்சாகும் நாடிக்குறியறிதல்.

ஏற்றதீபந்தன்னி லெரிசுடர்த்தீயைப்போல
போற்றியநாடிதானும் பொலிவரத்தோன்றுமாகில்
மாற்றரும்வாழ்வுநாளு மாளுமோர்மாதத்தென்று
நாற்றிசையுள்ளோர்க்கெல்லாம் நாடிநேபக்துசொல்லே. 65

### பிராணன்விடும் நாடிக்குடியறிதல்.

நிரைபுரவட்டம்பூண்டு நின்றிடுமரணைவால்போற்
குறைபடாப்பித்தமொன்றுங் குறைசதுமேகிற்றுமாகில்
உறைவிடுபிராணனென்று வுண்மைசொல்வாகடத்திற்
பறையதுகட்டிச்சென்று பண்டிதர்க்கெல்லாம்பாரே. 66

நோயின்சாரம் முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர்

அருளிச்செய்த

# அமிழ்தசாரம்.

### கணபதி துதி.

விருத்தம்.

ஆதியாங்கணேசன்காப்பு அறுநூற்றுக்காருவைமெல்லாஞ்
சோதியாம்ஆயிபாதந் துணையெனவுட்கொண்டேத்தி
நீதியாந்திரட்டுச்சூத்திரம் நிலைத்தவாகடமாய்ச்சொல்ல
வாதமாம்பிணிகள்தீரு மருந்தொடுகுணத்தைக்கேளே. 1

### வாதம் ஒன்பதுந்தீரச்சூரணம்.

வாதந்தானென்பதாகும் வருகின்றபக்கவாதம்
சீதமாய்நடுக்குவாதனு சிறந்திடுமுடக்குவாதம்

சூதமெய்சந்துவாதந் தோன்றியமுகத்தின்வாதம்
பேதமாம்வாதந்தீரப் பெருத்திடுமருந்துகேளே. 2

பருந்துதான்சித்திரமூலம் வளருமாவிலிங்குகொன்றை
திருந்தியமுருங்கைசங்கு சிறந்தவெள்ளருகுவேம்பு
பொருந்தியபெருக்குசுக்கு புகழுந்திப்பிலிமரீசங்
கருந்திரலவணவஞ்சுங் கால்மண்டலந்தாண்கொள்ளே. 3

மேலுக்குத்தொக்கிடவிடுந்தயிலம்.

கொள்ளவேயெண்ணெயஞ்சுங் குலவுகில்லைப்பாற்கற்கம்
விள்ளவேமுருங்கைவாகை மிகுத்தமாவிலிங்கைமூலம்
கள்ளவிழ்காயமிந்து கடியதிப்பிலிவசம்பு
உள்ளமாயெரித்துப்பின்னை யுடம்புதொடக்கடமுஞ்செய்யே. 4

பித்தம்நாற்பதுந்தீரச் சூரணம்.

செய்யதோரெண்ணஞ்சானச் சிறந்திடும்பித்தங்கேளாய்
அய்யமாஞ்சித்தப்பிரமை யறிவிலாப்பிரமைசுற்றும்
நையலேநடுக்கல்வாந்தி நலத்திடுசுழற்றல்வாய்நீர்
தையலேயிவைகளுக்குச் சாற்றிடமருந்துகேளே. 5

சூரணஞ்செய்யுந்தினுசுகள்.

சாற்றியமதுரங்கோஷ்டந் தளருமஞ்சிட்டியேலம்
போற்றியநெல்விமாஞ்சில் புகழுஞ்சந்தனங்கிராம்பு
மாற்றியதாளிசந்தான் மருவுசீரகமும்நாகம்
பாற்றுசர்க்கரையுங்கூட்டிப் பரிந்துமண்டலந்தான்கொள்ளே. 6

பித்தம் நாற்பதுந்தீர மூழ்குந்தைலம்.

பரிந்துநல்லெண்ணெய்பாலும் பருத்திடுநெல்விச்சாறுந்
திருந்தியமுசுமுசுக்கை சிந்திலும்பொன்னாங்காணி
வருந்தியமுத்தஞ்சிட்டி மதுரமோடேலமாஞ்சில்
பொருந்துசண்பகப்பூகிராம்பு புனைந்தெரித்தலைக்குவாரே. 7

நெய்செய்யுந்தினுசுகள்.

மனதுநல்விஞ்சிச்சாறு தருதிரிகடுகோடேலம்
கனமுறுதேக்குசிங்கி வாலுழுவரிசிபிந்து
கனமுறுநாகங்கண்டங் கத்திரியறந்தையோடு
நிலைவுறுசீழிரத்தம் நெய்யெரித்துள்ளேகொள்ளே. 9

எரித்தநல்லெண்ணெய்பாலும் இருவேலியிலர்மிச்சோடு
தரித்திடுசிந்தில்முத்தஞ் சந்தனதேவதாரம்
உருததிடுதண்ணீர்விட்டா னுயர்நிலப்பனைநன்னாரி
பருத்தமஞ்சனமஞ்சோடு பகர்தலைதனக்குவாரே. 10

### மூலநோயாறுந்தீரச் சூரணம்.

தனக்குறுமிரத்தமூலங் தாங்குறுமூலஞ்சீமூலம்
மனக்குறுவாதபித்தம் வளரையமூலத்தோடு
சினக்குறுமுளையாமூலஞ் சீமலக்குமுதமெல்லாங்
கனக்குறுமருந்துசொல்ல கன்னியேகேட்டிடாயே. 11

கன்னியின்சருகுமுத்தங் கரணையும்பெருத்தசுக்கும்
வன்னிபாஞ்சித்திரமூல மருட்கிழங்கொடுகடுக்காய்
பன்னிபபிரண்டைகொன்றை பகர்புளிநறலைகாட்டிற்
றுன்னியகரணைபாலிற் சூரணஞ்செய்துகொள்ளே. 12

### கிராணிதீரமருந்து.

செய்திடுவாதபித்த சிலேட்டுமக்கிராணிமூலங்
கொய்திடுகிராணிவாயு கூடியபிரத்தபித்தம்
நெய்திடுசங்கிராணி நிலைத்திடுசீகிராணி
யெய்திடுகிராணிக்கெல்லா மிணியநல்மருந்துகேளே. 13

இனியதோருடும்புகாய மிந்துப்புவளையலுப்பு
கனியவெள்ளுள்ளிசுக்கு கடியதிப்பிலிமரீசந்
தனியதுசவுட்டுமண்ணுந் தழச்சித்ரமூலமோமம்
பனியதுபிரமிச்சாற்றால் பண்ணியமருந்துகொள்ளே. 14

### குன்மமெட்டுந்தீரச்சூரணம்.

பண்ணியவாதபித்த பகரையக்குன்மமெல்லாம்
நண்ணியசத்திகுன்மம் நலத்திடுவாய்சேர்க்குன்மங்
கண்ணியயெரியுங்குன்மங் கனத்திடும்பிரட்டுக்குன்மங்
குண்ணியகுன்மந்தீரக் கூறக்கேள்மருந்துதானே. 1

கூறியநாவிசூதங் கொடியவெண்காரந்தாரங்
தேரியயிருவிலிங்கந் திகழ்மனோசிலையுங்காரங்
காறியகெந்தகந்தான் களர்திரிகடுகுகூட்டி
ஆறியபொடியதாக்கி யதிற்றேன்விட்டருந்துவாயே. 6

அருந்திடவாதபித்தம் ஐயமோடிற்சத்திதான்
வருந்துவாதத்தில்நாலும வளர்சலபித்தத்தாறும்
பொருந்தும்ஐயத்திற்பத்தும் போகுமேயிளைகளெல்லாம்
திருந்தியவாதபித்த சிலேட்மமுந்திரலாமே. 17

### தலைமூழ்குந்தைலம்.

ஆ[illegible]ருந்துகேளா யலைகடல்முத்தங்கோ[illegible]
காமிதுய[illegible]ட்டைக் கரைந்தை[illegible]தரும்பூ[illegible]யும்
போமிதுகொன்றை[illegible]ரியுநாவல்
ஓமதுகாச்சற்காய்ந்[illegible]திர்முந்தான்றீயே. 18

மதுரஞ்சந்தனங்கிராம்பு மகிழ்பச்சைமருரப்பூவுஞ்
சதிர்பெறுமிலவங்கந்தான் தாளிசமாஞ்சில்பூரங்
கதிரிலாமிச்சஞ்சீந்தில் கனமுத்தம்வேவிசட்டம்
எதிரிலாதெண்ணெய்பாலு மெரித்துநீமுழுகிடாயே. 19

## மேகம் இருபதுந்தீர ரசாயனம்.

எரித்திடுபிரத்தமேக மிசைந்தசிமேகந்தண்டில்
மரித்திடுமேகபுண்ணும் வருந்தியுகிரிச்சம்பாளை
தரித்திடுதுள்ளிமேகஞ் சலக்கட்டுமேகந்தங்கா
விரித்திடுமேகந்தீர விளம்பக்கேள்மருந்துதானே. 20

விளங்கியபாங்கிப்பட்டை மேரிகெந்தகஞ்சாதிக்காய்
களம்புறகிராம்புநாகங் கற்பூரஞ்சாதிப்பத்திரி
தளம்புறுமசுவகெந்தி தளர்கொடுவேலிமாஞ்சி
இளம்புசர்க்கரைநெய்கூட்டி யிதமுடனுட்கொள்வாயே. 21

## காமாலைதீரப்பொடி.

இதமுறுவாதபித்த மிசைந்தசிலேட்டுமங்காமாலை
பதமுறுமழற்காமாலை பாண்டுவீங்கியகாமாலை
நிதமுறுவாட்காமாலை நிதமஞ்சள்நீர்க்காமாலை
சிதமுலைவிற்பாரங்கள் சேர்ந்தகாமாலைதானே. 22

சேர்ந்தகாமாலைக்கெல்லாந் திறந்தரப்பொடியுங்கிட்டஞ்
சார்ந்திடுகடுக்காய்நெல்லி தான்றிசீரகமிரண்டும்
போர்ந்தவெள்ளுள்ளிகாந்தம் புகழ்பெறுகாயஞ்சுக்கு
சார்ந்ததிப்பிலிமரீசந் தான்பதம்பதச்சாற்றீயே. 23

## சொரிசிரங்குதீர உள்ளுக்குக்கிருதம்.

பதமுறுசூலைபுண்கள் பகர்ந்திடுகடிவிசாரம்
இதமுறுபெருவியாதி யிசைந்திடுதுட்டரோகம்
சதமுறுதேமல்மேனி தளருந்தாமரைகைவெள்ளை
நிதமுறுசொரிசிரங்கு நிகழ்த்திடுமருந்துகேளே. 24

## மேலுக்குச்சாம்பிராணித்தயிலப்பூசல்.

நிகழ்த்துநீரெட்டிவித்து நேர்படுஞ்சூகம்லிங்கந்
தகர்த்தநெல்விக்காய்கெந்தி தாமமுந்துருசுதுத்தம்
புகர்ந்தநெய்வார்த்தரைத்துப் பொருத்தநற்பதுநாட்கொள்ளு
தகத்திற்சாம்பிராணித் தயிலஞ்செய்துடம்பிற்பூசே. 25

## கண்[illegible]த்துக்குமேற்பட்ட சகலரோகமுந்தீரச் சூரணம்[illegible]

பூகியகபாலசூலை பொருந்தபின்னிசுநீர்[illegible]
நாசிகாபீடரோகம் நாற்றமு[illegible]
தேசிகங்காதிற்றீழுஞ் சேர்ந்திடுங்கபாலவா[illegible]
காசினித்தந்தரோகம் காந்திடமருந்துகே[illegible] 26

காந்திடுபெருமருந்து கண்டங்கத்திரியுஞ்சுக்குஞ்
சுரந்திடுஞ்செங்கத்தாரி தோன்றுசீரகமிரண்டும்
பரந்திடுகடுகுரோணி பகர்சங்கம்அரைத்ததையோடு
நிரந்தரஞ்சூர்ணந்திண்ண நீங்குமேல்நோய்கள்தானே. 27

தலைமூழ்குந்தயிலம்.

நீங்குகார்த்திகைக்கிழங்கு நிலக்குமிழ்தசமூலந்தான்
பாங்குறுமஞ்சள்மூன்று பகர்குப்பிக்கடுகுரோணி
தேங்குசாரடைபெருக்கு செங்கொடுவேலிசீந்தில்
பாங்குநல்லெண்ணெய்செய்து பருவமாய்வளஞ்செய்வாயே. 28

கவிசை பெருவயிறு மகோதரந்திர.

பருவமாங்கவிசையோடு பக்கவிப்புருதிசால
உருவமாம்பீலிகோவை யுதரத்தின்சூலையண்டி
கருவதையழிக்குங்கர்ப்பக் கடியவிப்புருதியோடி
பெருவயிறுடனேமற்றப் பெருமகோதரமுந்தானே. 29

பேய்த்தும்மட்டிக்கா யெண்ணெய்.

பெருத்தபேய்த்தும்மட்டிக்காய் பேசும்வெண்காக்கணம்வேர்
திருத்தமாம்லவணமைந்துஞ் சேர்ந்திடுகாரமைந்தும்
வருத்தமாவிலிங்கைகொன்றை வச்சிரத்தின்பால்மூலங்
கருத்துறுவசம்புமஞ்சள் காயம்வெள்ளுள்ளிகூட்டே. 30

காயநற்சிவதைபோளங் காட்டிணுமணக்கின்வித்தும்
வாயரோகணிமுருங்கை வள்ளிமாவவுரிசின்னி
பாயுறுகழற்சிகொத்தான் பகரும்வேலிப்பருத்தி
தேய்விளக்கெண்ணெய்பாலுஞ் சேர்த்தெரித்துள்ளேகொள்ளே. 31

சகலவாய்வுகளுந்தீரச் சூரணம்.

சேர்ந்திடுமிரத்தரோகஞ் செய்யநெஞ்சிறுகலுக்கும்
பார்த்திடும்வாதவாயு பயித்தியவாயுமேகஞ்
சார்த்திடும்வாயுமெய்யில் சருவாங்கவாயுமூலம்
ஏர்த்திடும்வாய்வுக்கெல்லா மிசைந்தநல்மருந்துகேளே. 32

சூரணத்தினுசுகள்.

இசைந்தசீரகமிரண்டு மியல்திரிகடுகுமூலம்
மிசைந்தநற்சித்திரமூல மாந்திரிபலையுமிந்து
இசைந்தவர்விளங்கங்காய மியற்றிடுசவுட்டுமண்ணுங்
கசந்தரோகணியுந்தேனுங் கலந்துண்ண நோய்கள்போமே. 33

### இரத்தவாந்தி ஐயகாசம் எலும்புருக்கித்தீர நெய்.

கலந்திடுமிரத்தவாந்தி கனரத்தரோகநெஞ்சிற்
புலந்திடுமிரத்தபித்தம் பொருந்தியசயகாசங்கள்
மலந்திடும்பெரும்பாடோடு வளரெலும்புருக்கிசூலை
கலந்திகழ்புண்ணுந்தீர நாரியேமருந்துகேளே. 34

நாரியேதண்ணீர்மிட்டான் நல்லத்தியரசால்வித்து
பாரியபனையசிந்தில் பகர்முத்தஞ்சாதிக்காயுஞ்
சீரியகிராம்புபத்திரி திரவியமைந்துங்கூட்டி
கூரியநெய்யிற்செய்துக் கொடுத்திடரோகம்போமே. 35

### சகலசுரங்களுந்தீரக் கியாழம்.

கொடுத்திடுசுரத்துக்கெல்லாங் கூறியமிச்சஞ்சிந்தில்
எடுத்தகாஞ்சோறிமுத்த மிசைபற்படாகமுட்டி
மடுத்திடுவேம்புகோஷ்டம் வளர்கண்டங்கதரியோடு
அடைவுடன்கியாழஞ்செய்து அருந்திடிற்சுரந்தான்போமே. 36

### சன்னிகள்தீர நசியம்.

தன்னுடன்சன்னிக்கெல்லாம் தயங்கியமுசுறுமுட்டை
மன்னுபூநாகமோடு வளர்ந்திடுங்கடுகுகாயம்
சொன்னதிப்பிலிமூலைப்பால் துலங்கியபிஞ்சிச்சாறு
முன்னமேவசம்போடுள்ளி மூக்கினில்நசியஞ்செய்யே. 37

ஓடியகர்ப்பத்தோடு உள்ளியவசம்புதாரம்
நாடியகௌரிநாவி நலந்திகழ்காயம்போளந்
தேடியமஞ்சள்மூலந் திரண்டமாவிலிங்கைவாகை
சூடியபெருமருந்து சொல்சிறுகுறிஞ்சான்கூட்டே. 38

சொல்லியயெருக்கும்புங்குந் துலங்கியமுருங்கைவேரும்
மல்லிகைசதுரக்கள்ளி மரமஞ்சள்நெரியரிச்சிப்பால்
புல்லியயெண்ணெயைந்தும் புகழுங்குக்குடத்தினண்டங்
கல்லியபதமதாக்கிக் கருத்துடன்மேலும்பூச்சே. 39

### சகலகரப்பனுந்தீர எண்ணெய்.

கருத்துறுபுடைகரப்பன் கருங்கொள்ளிக்கரப்பன்வீங்கி
வருந்திடுக்கரப்பன்பித்த வாதசிஞ்லட்டுமக்கரப்பன்
பெருத்தறிஞ்செங்கரப்பன் பிலத்தோரெரிகரப்பன்
திருத்தமாங்கரப்பனெல்லாந் தீர்ந்திடமருந்துகேளே. 40

தீர்ந்திடசெங்கதாரி சேர்கருநொச்சிதேற்று
சார்ந்திடுங்கழற்சிபுங்கு சங்கொடுசெங்கக்குப்பி
யேர்ந்திடுங்கிரந்திநாயகன் புகழ்செருப்படையுஞ்சின்னி
கூர்ந்தவேலிப்பருத்தி கொடிகள்வெள்ளறுகுதானே. 41

கொடியவேம்பாடம்பட்டை கூரியசிவனார்வேம்பு
நெடியநற்சிவதைமூலம் நேரியகண்டங்காரி
பொடியதுகடுக்காய்ரோணி பூதகரப்பான்பட்டை
வெடிபசீரகமிரண்டு விளக்கெண்ணெயெரித்துட்கொள்ளே. 42

சகல விஷங்களுந்தீரக் குடிநீர்.

கொள்ளவேவிஷபாகங்கள் கூறிடபலவயுண்டு
முள்ளிதூதனைகாரத்தை முதிருப்பக்கொண்டானெச்சி
கள்ளவிழ்ப்பிரமிசின்னி கழற்சிமாமலைநன்னாரி
தெள்ளியகக்காய்சுக்கு சேர்த்திட்டுக்குடிநீர்செய்யே. 43

கண்டமாலை பவுத்திரங்கள்தீரத் தயிலம்.

செய்பதோர்கண்டமாலை சேர்ந்திடுபவுத்திரங்கள்
வெய்யவிப்பிருதிவிச்ச மேவிகுந்துடையின்வாழை
பையபுண்சூலையோடு பகுத்திடும்பிளவைவீக்கம்
உய்யரையாப்புமூன்று முடைந்திடமருந்துகேளே. 44

உடைந்தவேப்பெண்ணெயுள்ளி யோங்குவேம்பாடம்பட்டை
கடைந்தநெற்கெந்திருதங் கரசுநற்றுருசுதுத்தம்
விடைந்தகுங்கிலியந்தாகம் மிருதராசிங்கூட்டி
இடைந்திடித்தயிலஞ்செய்பி லிக்கமாநோய்கள்போமே. 45

கண்ணோய்-கூகூ-ம்-தீரமருந்து.

இந்தவாநீலகாச மியற்றிடும்பித்தகாசம்
வந்தமாபடலம்பில்லம் மயிர்க்குத்துபுழுவெட்டோடு
சந்திகாமாலைக்கண்ணுந் தயர்நேத்திரவாயுதானும்
நந்திசொல்வினியமைந்தர் நயந்துரைவகையைக்கேளே. 46

உரைத்திடுமுத்துவெள்ளி உயர்ந்ததோர்தாமிரஞ்சங்கு
கரைத்திடுதுருசுதுத்தங் கைதலையோடுபொன்னும்
திரைத்திடுபீதரோணி சேர்புங்குநிம்பசாற்றால்
அரைத்திடுகண்ணிற்றெண்ணூற் றாதுநோயகன்றுபோமே. 47

கணணோய்-99-ம்-தீர மூழ்குந்தயிலம்.

போமிதுபொன்னாங்காணி புகழ்சிறுக்கீரைமுத்தம்
ஒழிதுசீந்தில்நிம்பம் உயருஞ்சண்பகப்பூநாதம்
ஆமிதுமதுரமேலம் அலருஞ்செங்கழுநீர்கோஷ்டம்
நாமினிசொன்னேமெண்ணெய் நற்பதுஞ்செய்துமூழ்கே. 48

செய்திடுஞ்சகலமருந்துக்கும் விஞ்சைமூலம்.

செய்திடுமருந்துக்கெல்லாஞ் சிறந்ததோர்விஞ்சைமூலம்
செய்திடும்பரிகாரந்தான் சித்தியாஞ்சகலதெல்லாம்

றுசெய்திடுஞ்சூக்ஷாசூக்ஷம் தேகம்பொன்னிறமதாகும்
செய்திடும்வாதத்திற்குச் செப்புவேனுதியாயே. 49

## வாதஞ்செய்வதற்கு ஆதிக்குருமருந்து.

ஆதியாம்பூமிநாத மதையைந்துசுத்திசெய்து
வேதியாமபழத்தின்சாறும் விட்டரைத்துலர்த்திக்கொண்டு
சாதியாமோட்டில்வைத்துத் தணலிடுகோழியாக
வாதியாம்பெயரீர்கேளீர் வடிந்திடுமெண்ணெய்தானே. 50

## முப்பூவாகியபூமிநாதத்தால்சகலசரக்குகளுங்கட்டுப்படும்.

தானென்றபூமிநாதம் சகலமுங்கட்டும்பாரு
வானென்றவிந்துவொன்று வளர்வெடியுப்புநான்கு
ஊனென்றசீனம்ரெண்டு ஒன்றாய்க்கூட்டிக்கல்வங்
கானென்றசிமிட்டுபாலுங் கருவுமேலிட்டுஆட்டே. 51

ஆட்டியேவில்லைசெய்து அகலமாயோட்டில்வைத்து
சூட்டியேகாயப்போடு சுறுக்கெனக்கணிவிட்டக்கால்
மாட்டியேகுக்கிடத்தில் வலமுடனுறிவாங்கி
பூட்டியேயெடுத்துப்பாரு புகழ்முப்பூச்சுன்னமாச்சே. 52

ஆச்சப்பாவீரம்பூரம் அறைந்திடுஞ்சரக்கையெல்லாம்
மூச்சாப்பாவோடொட்டாமல் முக்கியமாயடக்குஞ்சொன்னேன்
வாச்சப்பாசுண்ணஞ்செய்தீர் வளமுள்ளசெந்தூரங்கள்
காச்சப்பாநீறுமூலிகட்டு கட்கடிதான்காணே. 53

## உடற்சக்கரம்.

அடியொன்றுதலைமூன்று அதுவுஞ்சாவாம் அடுத்தவரையேர் நான்குஅதுவுஞ்சாவாம், படிபுகழுமுடலின்வரையெட்டில்நிற்கில் பையவேநோய்தீரும்பயமேயில்லை, கடிகமலக்கைகால்தன்வரையில்நிற்கில் கனகம்போற்றேகமுமாங்கண்டுகொள்ளு, அடிமுதலாயிரவிநின்றநாளைத்தொட்டு அவிசித்தோடிருபத்தெட்டாய்ந்துகொள்ளே. 54

## இரத்தமேகந்தீரத் தாளிசபத்திரிச்சூரணம்.

கொள்ளவேதாளிசங்கழஞ்சதாறு கூட்டுதிரிகடுகுகழஞ்சீரண்டு, அள்ளவேயேலமிலவங்கந்தானும் அப்பனேவகைக்குவகைக் கழஞ்சதைந்து, துள்ளவேயிடித்துவடிகொண்டபின்பு தூக்குகழஞ்சீராறுசீனிகூட்டி, யுள்ளன்பாய்த்தின்றுவரிவறக்ஷிபித்தம் ஓடுசலக்கடுப்பிரத்தமேகம்போமே. 55

## வேதைலிங்கக்கட்டு.

மேகம்போம்சகலநோய்வாய்வுந்தீரும் வேடிக்கைசிமிட்டுவித்தைவாதங்கேளு, பாகம்போமெண்ணுதேகெந்திதாரம் பகருமாய்

பொடியோடுசிலையுங்கூட்டித், தாகம்போங்கருவிட்டுஅரைத்துவாங்கிச் சமனாகலிங்கத்திற்கவசங்கட்டி, ஆகம்போமெண்ணாதேகுக்குடத்தில் அப்பனேசாதிலிங்கம்அடைகடாமே. 56

## கட்டியபலிங்கம் வேதையாட.

கட்டானலிங்கங் காட்டுமுன்னோர்களை
மட்டானதன்பதி வைத்திடுமவேதைகேள்
விட்டானசூடனும் வீரமுங்கூட்டிடு
தட்டானதில்லைத் தங்கம்போலாடுமே. 57

ஆடவேகெந்தியதி விஞ்சிச்சாறு
கூடவேவிட்டுக் குழையஅரைத்திடு
வாடவேசாமம் வளர்த்தவெயில்முகம்
நாடவேயிப்படி நாள்மூன்றுபாருமே. 58

பாருநீகெந்தகம் பற்பமதாக
சேருநீலிங்கமுஞ் செயமானகெந்தியும்
வாருநீர்பீங்கானில் வளருசுரிச்சாறும்
வருநீகோழி ரத்தமுங்கூட்டிடே. 59

கூட்டியதனிற் குழம்புஅப்பிரதத்தை
திட்டுரவிமுகந்தின மூன்றுலர்ந்தபின்
நாட்டிவராகம் நல்லபுடத்திலே
வாட்டியெடுக்க மாசற்றபற்பமே. 60

பற்பமினிக்கேள் பரந்திடுநோயெலாம்
அற்பமீதென்று அசடரேயெண்ணாதீர்
கற்பமீதாகுங் கர்மவினையறும்
றுட்பமதெல்லாம் துகர்ந்தனன்முற்றே. 61

அகஸ்தியமுனிவர் அருளிய

அமிழ்தசாரம் முற்றிற்று.

கடவுள் துணை.

தேரையர்

அருளிச்செய்த

# நோயின்சாரம் - 133.

கணபதி துதி.

வெண்பா.

ஆரியமாம்வாகடத்தி னுட்பொருளையாராய்ந்து
கீரியதாஞ்செந்தமிழிற் செப்பவே-மாரியென
வெள்ளமதம்பொழியும் வேழமுகமுடைய
வள்ளலே யென்மனத்துவா. 1

அரத்தையை நாவிலிட இருமல் ஆக்கிராணிக்க
பீனிசம் சளிதீரும்.

வாவெனவேசிலேட்டுமத்தால் வந்தயிருமல்களும்
போவெனவேநாவிலிடிற் போகுமே-பாவனையாய்
வாக்கானபீனிசமும மகத்தாஞ்சளியும்போம்
ஆக்கிராணஞ் செய்யிலரத்தே. 2

வாதச்சுரந்தீரக் கியாழம்.

அரத்தைசதகுப்பி சுக்கானகொச்சிச்சாற்றில்
அரைத்திழைபக்காச்சியருந்த-வருத்தத்
தலைவலிகள்நீரேற்றந் தன்னுடனேவாதசுரங்
குலைகுலைந்து போகுமெனக்கூறு. 3

பித்தசுரந்தீரக் கியாழம்.

கூறுகின்றபாவட்டை கொண்டசித்தாமுட்டி
வீரோமம்வேலிப்பருத்திவேர்-காறுகின்ற
நன்மிளகுங்கூட்டி நலமாய்க்கியாழமுண்ண
சென்மபித்தச்சுரம்போஞ் செப்பு. 4

சிலேட்மசுரந் தீரக்கியாழம்.

செப்புகின்றதிப்பிலியுஞ் சோராடாதோடைசுக்கும்
ஒப்பரியசித்தரத்தை யோமமுடன்-திப்பிலி
கண்டங்கத்திரிதேங் காய்ச்சிக்குடித்திடவே
தெண்டசிலேட்மச் சுரம்போம்செப்பு. 5

### சத்தியெரிவாதந்தீரப்பூசல்.

செப்பரியபேரிலந்தை சிறந்தபுளியாரையரைத்
தொப்பரியகாடியுடன் கரைத்துத்-தப்பாமல்
மத்திட்டுத்தான்கடைந்து வந்தநுரைபூசுவிக்கச்
சத்தியெரிவாதமில்லைத் தான். 6

### உதரவாயுதீரமருந்து.

தானென்னும்வெள்ளுள்ளி தப்பாதுப்பிற்பொதுகி
வேனென்னுமக்கினியில் வேகவைத்துத்-தீனென்னும்
இங்குவுடனரைத்துயேற்ற நீரிற்குடிக்க
வங்குதரவாயுவில்லை மான். 7

### நீர்கட்டுதீரக் கியாழம்.

மானேகேள்நீரடைக்கில் வாழும்பசிரியடன்
தானேகத்திரியினிலை தன்னோடே-பானைதனில்
ஒக்கக்கியாழமிட்டு ஊதினவெங்காரமிட்டுண்
கக்கிக்கடலுடைக்குங் காண். 8

### விரைவாதந்தீரக் கியாழம்.

காணும்புனல்முருங்கை கழற்சிக்கொடிபருப்பு
பூணும்கொத்தானுழனே போந்தசுக்கு-வேணுமெனப்
பண்ணீர்கியாழம் பருகிர்பருகியபின்
விண்ணில்விரைவாதம்போம் விட்டு. 9

### அசீரணமுங் கிராணியுந்தீரக்கியாழம்.

விட்டவொதியீர்க்குமேவு கருவேட்பீர்க்கும்
முட்டசுக்குசீரகமு மோதகமுந்-தட்டியிட்டுக்
காய்ந்தநீரைக்குடிக்கக் காணும்சீரணமாய்ப்
பாய்ந்தகிராணியும்போம் பார். 10

### பித்தந்தீரக் கியாழம்.

பாரிசைந்தநெல்லிமுள்ளி பாரதனிற்கூவிளமுஞ்
சீரிசைந்தசீரகமுஞ் சேர்ந்தசுக்கும்-வேரிசைந்த
சித்தமுட்டிநெற்பொரியுஞ் சேர்த்துக்கியாழமுண்ண
பித்தம்விட்டுப்போகுமெனப் பேசு. 11

### குன்மவலிகிருமிதீரக் கியாழம்.

பேசும்பிரண்டையுடன் பேரிசைந்தவேட்பீர்க்கும்
மூசும்புரசுவித்து மோதகமும்-வாசிபண்ணுங்
கொள்ளிற்கியாழமதிற் குன்மவலிகிருமி
விள்ளிவிழுந்தேகு மீது. 12

வீக்கம்பீலிகை அக்கினிமந்தந்தீர மூக்கிரட்டைவேர்.

பீதுவெனுங்கண்ணினடுவேரினைச் சுன்னப்பொதுக்கிப்
போதமெனுந்தீயிற் புடமிட்டு-ஊதியுண்ண
வீலைப்பொலிகையுடனே பீறுமக்கினிமந்தம்
பார்க்கப்பறந்துபோம் பாருமே. 13

விக்கலும் சத்தியுந் தீரப்பொடி.

பண்ணும்பருத்திரவிரை பாரிலுள்ளநெற்பொரியும்
எண்ணுசிறுதிப்பிலியும் ஏலமொடு-நண்ணுபொடி
சர்க்கரையுந்தேனுந்தளரக் குழைத்துண்ண
விக்கல்சத்திபோகும் விரும்பு. 14

பித்தந்தீரம் பொடிமருந்து.

விரும்புகின்றசீரகமு மேன்மையுள்ளநெல்லிமுள்ளி
யொரும்புசுக்கேலம்பொடி சரியாய்-நிரம்பிடவே
சர்க்கரையுந்தேனுந் தளரக்குழைத்துண்ண
தொக்குடனேபோம்பித்தஞ் சோம்பு. 15

அஷ்டகுன்மந்தீரச் சூரணம்.

சேநம்புசிறுமண்டூரஞ் சுத்திபொடிநாயுருவிச்
சாம்பல்மிளகுபொடிசமனுப்-தேம்பிடவே
எட்டிலோன்றுகாயமிட்டிணக்கியோர்கழஞ்சி
அட்டகுன்மம்போமேயலேந்து. 16

அண்டவாதந்தீரப்பொடி.

அலேயுங்கருவளேய லார்க்கப்பொடிசெய்து
நிலேயுமிளகுபொடி நேர்சரியாய்-மலேயில்
பெருங்காயங்கூட்டியுண்ணப் பேரண்டவாதம்
வரும்பானேபோல்வீக்கம் வாடும். 17

எரிகுன்மந்தீரக்கியாழம்.

வாடுகின்றயிஞ்சுசுக்கு வாரிக்கியாழமதில்
தேடுகின்றகாயந்திப்பிலிசேர்த்து-நாடுபுகழ்
செப்புக்கரத்தீர்செலுத்திர் செலுத்தியபின்
வெப்பெரிகுன்மம்போம் விரைந்து. 18

அசீரணம் சகலதோஷம் சூலே சுரங்கிருமிதீர்.

விரைந்துமிளகரைத்து வெந்நீரினிற்கரைத்து
அருந்துசீரணங்களாறும்-வருந்துஞ்
சலதோஷஞ்சூலே சகலசுரமுங்கிருமி
பெலனேடிப்போகுமாம் பேறு. 19

### சுவாசகாசந்திரக் கியாழம்.

பெறுவீர்பிராய்சூரை வேசரிசங்குகூட்டி
மாறுநீர்விட்டாவிவாங்கிக்-கூறிய தில்
திப்பிலியும்வெங்காரந் தேன்விட்டுமென்பொடியாய்
ஒப்புசுவாசக்காச மோடும். 20

### வாய்கரப்பன் வீக்கந்திரக்குடிநீர்.

ஓடுகின்றசாறடையும் உப்புமரிதகியும்
வாடுகின்றசுக்கும் வகைகுடிநீர்-தேடி
மறுகமறுகக்குடிக்க வாயுகரப்பன்வண்மை
பறுபறுகெனக்கமியம் பார். 21

### மேகம்-உட்காச்சல்-பிரமியந்திர.

பாரீரேமேகம்வந்தால் பண்புபேயம்பழத்தில்
சேரீரேசர்க்கரையுஞ் சீரகமும்-பாரே.
யுண்டாக்காற்போகாதோ வுட்காச்சல்பிரமியமுங்
கண்டாக்காற்போகாதோ காண். 22

### ஈளை-இருமல்-காசந்திரப்-பிட்டவிநீர்.

சாணீசாடாதோடை கண்டங்கத்திரிதுளசி
தூணீர்பிட்டவிநீரிற் றிப்பிலித்தூள்-பேணியிடில்
கொக்குக்கொகென்றிருமுங் கொடுங்காசமீளையது
பொக்குப்பொக்கென்றோடிப் போம். 23

### இரத்தப்பித்தந்நீரக்குடிநீர்.

போதீரேதோடையிலே போந்ததொருமுந்திரிகை
சேதீரேநற்குருநீர் செய்திடுவாய்-மாதீரே
அக்காரங்கூட்டி யருந்தீரருந்தியபின்
உட்காராத்தபித்த மோடும். 24

### ஐயம் இருபதுந்திரச் சூரணம்.

ஓடுகின்றதாளிசப் பத்திரியுமோர்மிளகும்
தேடுகின்றநாகப்பூ திப்பிலியுங்-கூடயில்
கூகைநீரேல மிதிலவங்கந்தான்கூட்டி
பாகமாய்ச்சூரணமும் பண். 25

பண்ணியபின்னக்காரம் பாகமாய்க்கூட்டி
யுண்ணக்கழஞ்சுதே னுள்ளிட்டே-நண்ணவே
நாளுனுபானத்தில் நாவிற்பருகியிடப்
போனல்நா லையமேபோம். 26

### இருமலுப்பிசந்திரச் சூரணம்.

போமேகடுநெல்லி போற்றரியதான்றிசிங்கி
தாமேநற்கோஷ்டஞ் சடாமாஞ்சில-ஆமே
திரிகடுகிந்திப்பு சிறுதேக்குகண்டம
திருகிடவேசூரணமாய்ச் செய். 27

### செய்தமருந்து தின்னுமனுபானம்.

செய்தமருந்து செலுத்தவிரும்பிக்கேள்
எய்தயிஞ்சிச்சாறுந தேனிட்டுண்ண-ஐபமறக்
குத்திக்குத்திற்றிருமுங் கூட்டும்பிசச்சுவாசந்
தத்திததிற்றோடுந தான். 28

தானேயடம்புவிரை தப்பாமலோர்கழஞ்சு
மானேமறுநீரால் வாங்கியுண்ண-நானேசொல்
எழுஞாயிறுகிரந்தி ஈளையெலிகடியும்
விழுமாறுசொன்னேன்கேள் வேண்டு. 29

### ஈளை-பஞ்சகாசம்-விக்கல்தீர எண்ணெய்.

வேண்டும்பெருங்காயம் வேலியிலைச்சாறும்
ஆண்டுசென்ற ஆமணக்கெண்ணெய்கூட்டி-பாண்டமதில்
இட்டேவடித்துண்ண ஈளைபஞ்சகாசம்விக்கல்
விட்டேகிப்போகும் வெருண்டு. 30

### பஞ்சசுவாசகாசந்தீரப்பொடி.

வெருண்டமிளகோர்மூன்று விரையஞ்சிலெட்டு
திரண்டபொடிகழஞ்சு தேனிற்கொள்.மகுண்டிதனில்
பட்டேன்பட்டேனென்னும் பஞ்சசுவாசககாசங்
கெட்டேன்கெட்டேனென்பேரங் கேள். 31

### சிலேட்டுமத்தால்வந்த நோய்தீர எண்ணெய்.

கேளுங்கையாந்தகரைச் சாறுங்கிளர்கடுக்காய்
மீளுநல்லெண்ணெயுடன் வெந்திறக்கி-நாளுமெட்டுத்
தினந்தினங்கழஞ்சு சிலேட்டுமத்தாலவந்தபிணி
சொன்னபோதே யோடுந் தூது. 32

### ஈளை இருமல் சுவாசந்தீரக் கிருதம்.

சூளையின்பழரசமுஞ் சுத்தாவினெய்பால்
திதிவிருசீரகந் திரிகடுகு-மாதேகேள்
ஏகாரவென்றேயெழும்புங் காசசுவாசம்சூளை
பரபரவென்றேயேகும் பார். 33

### சுரச்சுவாசந்தீரச் சிங்கித்தயிலம்.

பாருநாரத்தைப் பழச்சாற்றில் முப்பலையுந்
தேருதிப்பிலிமிளகு சேர்த்தசுக்கு-மூரியதோர்
தேத்தாம்பழமரைத்து சிங்கியிறக்கி
வார்த்தாற்சுரச்சுவாச மாறும். 34

### வாதபித்தம்-ஐயம்-அஸ்திசுரம்-தாகசுரந்தீர ஆடாதோடைக் கிருதம்.

மாறுந்தோடைச்சாறும் வந்தாவினெய்பாலும்
தேறுந்திப்பிலியானைத் திப்பிலியுங்-கூறுங்
கொடுவேலிதன்னுடனே கூட்டியேநவாச்சாரம்
வடிவேகவேகவே வை. 35

வேகவைத்தநெய்யை விரும்பியிருநேரம்பாகம்
வைக்கில்வாதபித்தம் பாலையம்தேகமதில்
வந்தவிஷமசுரம் அஸ்திசுரந்தாகசுரம்
பிந்தாமற்போகும் பிரிந்து. 36

### குளிர்சுரம் தாபசுரந்தீர வேர்.

பிரிந்துயிளவெந்நீரிற் பின்முதியார்கூந்த
லரிந்துமதன்வேரையரைத்து-பரிந்துண்ண
ஈறுசுரமுங்குளிருந்தீண்டாத் தாபச்சுரமுங்
கீறுடனேபோமிதனைக் கேட்டு. 37

### அஜீரணந்தீர மருந்து.

கேட்டவெள்ளைக்காக்கணம்வேர் கேளுநேன்மிளகு
கூட்டியிளவெந்நீரிற் கொண்டுவிட-நாடடைவிட்டுப்
போமேயஜீரணமுன் புகுமேசமுத்திரத்தில்
நாமேயுரைக்கக்கேள் நன்று. 38

### மந்தந்தீரக் கியாழம்.

புன்றாய்வேர்க்கொம்பு நற்சாரடைவேரும்
ஒன்றாய்க்கியாழமிட்டுண்டுவிடி-லன்றேதான்
ஓடுமேமந்தம்ஒழியுமே நாட்டைவிட்டு
வாடுமேகெட்டு மனம். 93

### விஷந்தீர நசியமுங் குடிநீரும்.

மனமேகையாந்தகரைச் சாறுமகிழ்வித்துங்
கனமாய்நசியம்விஷங்காணாது-சினமாக
உப்புகரைத்தவென்னீருட்கொண்டு வாந்திசெய்து
தப்பாவிஷங்கள் சமிக்கும். 40

### பிருமைதாகம் விசுழியிருமல் தோஷந்தீர.

சமிக்குமிரும்பதனைத் தப்பாமற்காய்ச்சி
யமுக்கியேமோரிலருந்தில்-இமிழ்க்க
பிருமைவிட்டுத்தானேனும் பேசுக்தாகம்விசுழி
இருமல்தோஷந் தீருமெல்லாம். 41

### கிரந்திபெழுவான் வாதபித்தசிலேட்டுமந்தீர.

எல்லாக்கிரந்தியும் எழுவானம்வாதபித்தம்
பொல்லாச்சிலேட்டுமமும் போய்விடுமே-வில்லாரும்
நிழலுருவத்தாளே நிறைபங்கயமாதி
னெழிலுருவத்தாளே யியம்பு. 42

### வாதகரப்பன் குணம்.

இயம்புந்தியிர்காய்ச்ச லெங்கும்விக்கதிரட்சி
தயங்குங்கனுத்தோறுந் தான்கடுப்பாம்-பயம்படவே
வந்தவரைக்கணத்தில் வாதகரப்பன்வண்ணை
செந்தாமரைமுகத்தாய் செப்பு. 43

### செங்கரப்பன் குணம்.

செப்புந்தலையரிப்பு சேருங்காய்ச்சல்தினவு
வெப்புச்சலந்தரித்து வீராக-தப்பாமல்
வாந்திவரும்நீர்சிவக்கும் வருகுமலஞ்சிக்கிவிடும்
சேர்ந்துமந்தசெங்கரப்பன் திண்ணம். 44

### இதுவுமது.

திண்ணஞ்சேர்செங்கரப்பன் செய்யும்வகைநெஞ்சகம்மல்
பண்ணும்வாயுங்கிரந்திப் பண்ணிவிடும்-கண்ணுதலே
மண்டைவலிக்கும்புடைக்கும் வார்காதிற்சீயோடுங்
கெண்டைவிழியாயிதனைக் கேள். 45

### தோஷசுரப்பன் குணம்.

கோளாய்குளிர்காய்ச்சல் கீழ்வருமேகண்டுசுழல்
மீளாவிஷம்போல் விளைக்குவரும்-நாளாகப்
பூதம்போல்வீங்கிவற்றிப் புண்போலெங்குந்திமிர்க்கும்
ஓதுந்தோஷக்கரப்பானுற்று. 46

### தோஷகரப்பன் குணம்.

கேளாய்குளிர்காய்ச்சல் கீழ்வருமேகண்டுசுழல்
மீளாவிஷம்போல் விளைந்துவரும்-நாளாகப்
பூதம்போல்வீங்கிவற்றிப் புண்போலெங்குந்திமிர்க்கும்
ஓதுந்தோஷக்கரப்பானுற்று. 47

அரிகரப்பன் குணம்.

உற்றவரிகரப்பன் ஒதக்கேளொண்டொடியீர்
மற்றவிக்கமபோனிபுற்றம் வசதிடும்புண்-சற்றெண்ணி
ஆறமற்புண்கரைக்கும் ஆனகருவழிக்கும்
மாறுதவிக்குணத்தின் வாறு. 47

கரப்பன்நீரச் சூரணம்.

வாறுகொடிவேலி குறிஞ்சாவக்கணைத்திப்பிலை
கூறுகருவேம்பு குடசப்பாலை-சீறு
சிவனார்தன்வேம்புஞ் செங்கத்தாரியிளகும்
இவையேகொள்பல்கரப்ப னேகும். 48

கரப்பன்நீர உள்ளுக்கு மேலுக்கும் எண்ணெய்.

எருக்கநொச்சி வேறழிஞ்சில்சாணைக்கி
பாகும்நாக்கைதசின்னி யாமணக்கில்-பாகமாய்
வடியிர்வசம்புள்ளி வான்கடுகுங்கூட்டிக்
குடியிர்பூசிர்கரப்பன் கூறு. 49

பலகரப்பன்நீர எண்ணெய்.

கூறுசெங்கத்தாரிபட்டை கார்மிளகுசின்னியிலை
வீறுசிறுகுறிஞ்சான் வேர்கூட்டித்-தேறமுத்
தெண்ணெய்விட்டுக்காய்ச்சி விக்துப்பல்கரப்பனெனில்
திணறுவிடிலென்றுந் தினம். 50

விக்கநீரக குடிநீர்.

தினத்தாளிசக்குசுரை சிறுநெருஞ்சில்தூது
மனத்தாலல்நீர்முள்ளி மாமாலை-கனத்துவசில்
வெண்காரமேன்பொடியாம் மேவுகுடிநீரிவிடில்
கண்காணுவிக்கம்போங் காண். 51

விக்கநீர உள்ளுக்கு மேலுக்குமருந்து.

காரம்எவட்சாரங் கனத்தபிக்குமேன்பொடியாப்
சரவுள்ளிபிஞ்சிச்சா றிதனிவிடல்-பாரமுள்ள
விக்கம்வற்றித்தூக்கமுண்டா மேலும்பூசில்கேழ்ந்து
வாய்க்கவே சாய்க்குமலம். 52

மலசலக்கட்டி விம்மிவிக்கிய கரப்பன்நீர.

மலநீரடைத்துவிம்மி வாயுகரப்பன்விக்கில்
பெலமாமரிதகியைப் பிட்டிட்டு-குலஆவின்
கோமியத்திற்கூட்டிக் குலவியருந்திடவே
சாமமதிற்போக்கிண்ணக் தான். 53

மலக்கட்டால் விக்கியநீர எண்ணெய்.

திண்ணஞ்சிறகுரட்டை தேங்காய்ச்சக்கள்ளி
தண்ணக்கனித்தனியே சாறமுக்காப்-பெண்ணேகேள்

ஆமணக்கினெய்ரோணி யன்போடுகொச்சியுண்ண
சாமமதில்விக்கமலஞ் சாய்க்கும். 54

கிரந்தி-புண்-சூலை-வயிற்றுவலி-வாதகுஷ்டந்தீர
பட்டைச் சூரணம்.

சாய்க்கும்படிகேளாய் தான்கிரந்திபுண்சூலை
வாய்க்கும்வயிற்றுவலி வாதகுஷ்டம்-நீங்கமருந்
துண்ணுவுலகத்தி லுய்யாமல்மானிடர்க்குப்
பண்ணுபட்டைசூரணமும் பார்த்து. 55

பார்த்துகடைமருந்து பஞ்சலவணம்விளங்கஞ்
சார்த்துகருஞ்சீரகமுந் தானேமம்-ஏர்த்தபடி
இட்டுபட்டைச்சூரணமு மிரண்டுபங்கிற்கலந்து
தட்டிகொட்டித்தின்னத் தான். 56

தின்னதேன்நெய்மருந்து சேர்ந்தபடிமுக்கழஞ்சு
பன்னுதான்காலமதிற் பாங்குடனே-அன்னங்கேள்
பத்தியந்தான்செய்கீரைத் தண்டுபலாதுவரை
உத்தியநெற்றிலிசுறு வுண். 57

மலக்கட்டு வெப்புவாரிதீர சிவதைவேர்ச்சூரணம்.

உண்ணஇலவங்கம் ஓதுபலைமுக்கடுகு
திண்ணேலம்நாகப்பூ சேர்ந்தமுத்தம்-பண்ணுபொடி
பாலுடனேநற்சிவதை பாலுடனேசத்திபொடி
நாலுடனேமுன்பொடிசேர் நன்று. 58

நன்றுபொடிமுக்கழஞ்சு நாளுந்தேன்சர்க்கரையில்
தின்றுவிடும்போதே சிதறிவிடும்-என்றுந்தான்
மீளாமலக்கட்டு மிகுந்தவெப்புவாயு
கிளாகநோக்குங் கிரந்தி. 59

கிரந்திகட்டுச் சூலைதீர.

கிரந்திகட்டுச்சூலைதனக் கேர்க்கநவாச்சாரம்
பொருந்துமிகது போற்றரைக்கும்போது-மருந்துபச்சை
காவியடப்பம்விரை நற்கோஷ்டம்வாளமிவை
மேவுகிம்பச்சாற்றிலிட் டீளும். 60

வாதந்தீரச் சூரணம்.

மீளுமிலைக்கள்ளி வேர்ப்பட்டையையுலர்த்தி
தாளாகவேயிடித்துத் துப்பபொடி-கேளிரண்டு
காசற்றளையெடுத்து காலையிற் றேனிலுள்ள
தேசத்தில்வாதம்போந் தேறு. 61

மகோதரந்தீரச்சாறு.

தேறும்பேய்ப்பீர்க்கின் காய் சிதறபிடித்துப்பிழிந்த
சாறுபரிவுடனே தானுழக்கில்.கூறுகின்ற

நற்பெருங்காயங் கடுகக்கழஞ்சிடும்நாள்மூன்றுள்
சொற்பெருமகோதரம்போகுஞ் சொல். 62

கிராணிதீரக் கருங்கோழி எண்ணெய்.

சொல்லாம்கருங்கோழித் தோற்போக்கியுட்சதையில்
நில்லோமமுக்கடுகுநேர்காயம்-நல்லாய்கேள்
பஞ்சலவணந்தயிரிற் பண்ணுமெண்ணெய்தான்குடிக்க
அஞ்சுபரிசக்கிராணியாறும். 63

கிராணிதீர உடும்பெண்ணெய்.

ஆறுமுடும்புசதை யன்பானமூக்கடுகு
கூறுங்கொடுவேலிகூர்வசம்பும்-வீறுடைய
சீரகமுமுள்ளியொடு சேர்த்தரைத்துமோ ருமெண்ணெய்
கூரணமாங்கிராணி குணமாம். 64

வாயுகிராணிதீரநத்தைச்சதைச்சதை எண்ணெய்.

குணமாநத்தைச்சதையுங் கூறுமுக்கடுகோமம்
கணமான திரிபலைசார் சீரகமும்-மணமாகுங்
காயங்கடுகிந்து காரெண்ணெயிற்காய்ச்சில
வாயுகிராணிபிபோகும் வண்ணம். 65

கிராணிதீர எண்ணெய்.

வண்ணங்காயடுகு வாவிந்துநாற்பலமுந்
திண்ணந்தயிர்நீரிற் செய்குடிநீர்-நண்ணியதிற்
சுக்குடனேமூன்றுபலந் தோற்புங்குஞ்சாரடையுந்
தக்கவட்டதிரிப்பிவேர் தான். 66

வேருங்கிராம்பும் வெண்சாதிபத்திரியும்
சேர்மோதங்கச்சோலந் திரிபலையுஞ்-சாருங்
கருவேப்பிலைகடுக்காய்காணும் எவக்ஷாரமெண்ணெய்
அருமெய்யிறகிராணி யகலும். 67

வாயுகிராணிதீர எண்ணெய்.

அகலுநுணச்சாற்றி லானதயிர்நீர்சரியாய்
புகலுமுகக்கடுகிந்துப்பொடு விடையம-இகலும்
வடிவுடையசாதிக்காய் வருமெணணெய்கொள்ளப்
பொடிபடும்வாயுக்கிராணிப் போறமு. 58

கிராணிதீர எணணெய்.

போற்றும்பிரண்டை சுக்குப்பொடிமிளகுதிப்பிலியும்
ஏற்றும்எவக்ஷாரம்இங்கு சீரகமும்-வீறிருந்த
விடையந்தயிரெண்ணெய் வேகவித்துக்கொள்ளப்
பொடியாங்கிராணிவிட்டுப் போம். 69

வாதகுன்மந்தீரப் பேய்த்தும்மட்டிக்காய் எண்ணெய்.

விடுபேய்த்தும்மட்டிக்காய் வேகவைத்துமுப்பலையும்
இடுவாய்திரிகடுகும் இந்துப்பொடிகூட

சிற்றுமணக்கெண்ணெய் சேர்த்துவிடில்வாயுகுன்மம்
பெற்றூர்மலங்கழியும் பின். 70

பக்ஷிதோஷந் தேரைத்தோஷங்காமாலைதீர.

பின்னுமிட்டான்சாற்றில் பெற்றுவினெய்சேர்த்து
பன்னுங்கிழங்கரைத்துப் பால்கூட்டி-சொன்னபடி
பாசமிட்டுத்தின்றுவிடில் பக்ஷிதோஷந்தேரை
யேகுமது காமாலையே. 71

பாண்டுபித்தங் கிராணி தசமூலந்தீர.

காமாலைபோங்கடுக்காய் கியாழத்தின்நெய்விட்டு
போமேகடுநெல்லி போதரைத்து-வேமதனிற்
பக்குவம்பார்த்தேவடித்துண் பாண்டுபித்தங்கிராணியறும்
திக்கெனப்போமூலந் திசை. 72

விக்கந்தீர எண்ணெய்.

திசையாமூலைப்பாலிற் சேர்த்திடெண்ணெய்பாதி
இசைபஞ்சதிரவியம்பாரிருவேலி-அசையா
கப்புமணமஞ்சள் கடுமூகங்காய்ச்சிபிடில்
ஒப்புடனேவிக்கம்விடு மோது. 73

நீர்க்கழிச்சல்தீர மருந்து.

ஓதும்வெண்குன்றிமிரைந்தோற் போக்கியும்பருப்பு
வாதுபுளியிரைத்தோல் மத்தித்து-மேதியெனும்
வெண்ணெயிலோர்கழஞ்சில் வெள்ளம்விடுநீர்கழிச்சல்
நிண்ணுவிடுந்தேன்மொழியாய் நேர். 74

பெரும்பாடுதீர நெய்.

நேராகுநாவற்றேல் நீண்டவொதித்தோலும்
போராகவேகுடிநீர் பின்போட்டுச்-சீராக
ஆவின்பால்நெய்மதுரம் அரைத்துமேபாகமிட்டுண்
தேவிபெரும்பாடது செல்லும். 75

விப்புருதிதீர நெய்.

செல்லாதுவிப்புருதி சேருந்திரிபலையும்
வல்லாகக்காய்ச்சி வடித்துண்ண-நில்லுமென
முன்புசொன்னபூவரைத்து முற்றுநறுநெய்பாலில்
அன்புடனேகாய்ச்சி யருந்து. 76

கர்ப்பவிப்புருதிதீர.

அருந்தும்பொழுது கர்ப்பவிப்புருதியாறுங்
திருந்துநறுநெய்நாழி சேர்த்திடுவாய்-திருகுகள்ளிப்
பாலுழக்குக்கூட்டிப் பழம்புளியுஞ்சேர்கூட்டி
சேல்விழியாய்காய்ச்சிடு சேர்த்து. 77

### வாதந்தீர எண்ணெய்.

சேர்த்துவந்தவாதஞ் சிதறமருந்துரைக்கில்
எத்துமிலைக்கள்ளி யெருக்கின்சாறும்-வித்திதனில்
விருண்டாமணக்கெண்ணெய் விட்டுக்காய்ச்சிட்டந்த
ஆருண்டுவிடுமென்றே யறி. 78

### மூலந்தீரக் கிருதம்.

அறியும்பிரண்டையிலை யாமணக்கின் தாளும்
செறியும்புளிநறலை சேர்வேலி-குறுகுபொடி
அக்கிராகாரம்யோற்றுமெண்ணெய் தேன்நெப்
இடமானமூலம்போஞ் சேர். 79

### காதெழுச்சிதீரத் தயிலம்.

சேரெருக்கின்சாறோடு சேர்த்திடெண்ணெய்சுக்குள்ளி
கூர்வசம்புங்குன்றிமுத்தங் கோஷ்டமுடன்-நேராக
இந்துப்புதிப்பிலியும் எரித்துமேகாதிவிட
உந்திவிடுமெழுச்சி யுரை. 80

### ஜன்னிதீர உள்ளுக்கு மேலுக்குந் தைலம்.

உரையும்வசம்புள்ளி யுற்றகடுங்காயந்
திரைபூநாகம்பரப்பின் சீர்கண்டங்-கரைய
அரைத்துவடிவேம்பின்நெய் யதிற்சன்னிபோகும்
தூரத்திடப்பூசிட்டுக்கொள் தூறு. 81

### அதிசாரந்தீர மருந்து.

தூறுமதிசாரந் துலையமருந்துரைக்கில்
ஆறுமாதளைத்தே னைத்துருட்டி-கூறும்
ஆண்பாலிற்கொள்ள வகலும்பதினெட்டுங்
தேன்பாகுமொழிமீர் செய்யீர். 82

### கல்லடைப்பு நீரடைப்புந்தீர சாறு.

ஈருள்ளிசாருழக்கோ டேற்றககாரங்கழஞ்சு
சாரக்குக்கிடத்திநெச்சந் தான்கழஞ்சு-வார்முலையாய்
ஒன்றாய்விளாவியுடனருந்தக் கல்லடைப்பும்
சென்றோடும்நீரடைப்புந் தேடி. 83

### நீரடைப்புதீர மருந்து.

தேடுகஞ்சம்பத்திரியிற் சேர்துருசுநீசாகிபத்துப்
போடுசுட்டுத்தேசிபழம் பூஞ்சாறு-கூடவிட்டு
மேலும்மூடவ்விலையால் விரும்பிமமறுநாளருந்த
வேலைபிற்போம்நீரடைப்பு விட்டு. 84

### நீரடைப்பு கல்லடைப்புதீர கியாழம்.

விட்டுநெருஞ்சியின்வேர் வெண்சுரையின்தண்டுசுக்
கிட்டுகெடுதான்றி கீழ்க்காய்வே-ரிட்டசிறு
பூனையின்வேரோடு புகலுஞ்சிறுகீரை
வாளைவென்றகண்ணணாய்நீர் வார்த்து. 85

வார்த்தநீரெட்டொன்றாய் வற்றியபின்றாணிறுத்து
போர்த்தபசுவெண்ணெயுமே போட்டருந்தப்-பார்த்து
திசைத்தோடுநீரடைப்புச் சேருகின்றகல்லடைப்பும்
பகைத்தோடுஞ்சொன்னேன் பரிந்து. 86

### பெரும்பாடுதீர மருந்து.

பரிந்துமூக்காவேளைவேர்ப் பட்டைதனையெடுத்து
கரைந்துபச்சைநெல்லரிசிக் கழுநீரிற்-திருந்த
அரைத்ததனைமுக்கழஞ்சு அந்திசந்திகொள்ள
உரைத்தபெரும்பாடுவிட் டோடும். 87

### ஓடுகுன்மந்தீரப்பொடி.

ஓடுகுன்மங்கொண்டு உழலுகின்றமங்கையரே
தேடுதுப்பைமேனிச் செருப்படையும்-நாடுதனிற்
கையாந்தகரைக் கருதிப்பொடிசெய்து
மெய்யாத்தேனோடுண் விரும்பு. 88

### இரத்தமூலக்கிராணிதீர எண்ணெய்.

மூரும்பிரத்தமூலம் வீழுங்கிராணி
மருந்தினுற்கொள்ள-மருந்திருந்துங்
கொட்டக்கரந்தை கொடிபனற்சீரகமும்
இட்டெண்ணெய் காய்ச்சிடிலேகும். 89

### வறக்ஷிபிருமல்தீர லேகியம்.

ஏகும்வறட்சி யிருமலிவைதனக்கு
பாகுநறுதாளிபனையின் வெல்லம்-வாகுடனே
பச்சரிசிநெய்யும் பதப்பண்ணலேகியத்தை
நிச்சியமாய்த்தின்றிட நீறும். 90

### அஸ்திசுரந்தீர மருந்து.

நீறுகின்றஅஸ்திசுரம் நிச்சயமாய்த்தான்மாற
பாறுஞ்செனனகரைப் பழச்சாறு-சோறுவரிக்
களைதாழைபுங்கடுக்காய் கருவேலம்பட்டைபொடித்
தத்திலேயிட்டருந் தரிக்கும். 91

### வலிகுன்மந்தீர வெண்ணெய்.

அரியப்பசும்பாலி லானதிருகுகள்ளி
யுரியபாற் சேர்காய்ச்சி யொன்றாய்-வருதரியில்
மத்திட்டுத்தான்கடைந்து வந்த வெண்ணெய்கொண்டுவிட
உற்றவலிக்குன்ம மோடும். 92

### பிள்ளைபெற்றவயிற்றில் சோரைதங்கியதுதீரக் குடிநீர்.

ஓடும்பிள்ளைப்பிறந்த வுறுவயிறு தான்பழுத்து
கூடுகின்றசோரையது கூண்டெடுத்தாற்-போடுசுக்கு
வெள்வெங்காயம் மிளகு வேலிப்பருத்தியிலை
கொள்மூன்றுநாள்குடி நீர்கொள். 93

### பித்தகாமாலைதீரப்பொடி.

கொள்ளேதிரிபலையுங் கூட்டுகரிப்பானுமஞ்சள்
விள்ளேயோமப்பொடியு மீதிதனை-மெள்ளவே
தாளானதையருந்து தூங்குங்காமாலைபித்தம்
வாளைவென்றகண்ணாய் மருந்து. 94

### கர்ப்பவிப்புருதி தீரமருந்து.

வருந்துகருவேல்வேர்த்தோல் மானேயீதல்லால்
விரும்புகருங்காக்கணத்தின் வேர்த்தோல்-திருந்தவே
மூன்றுமாதகாடி முன்னீரதிலரைத்தீ
தோன்றுகர்ப்பவிப்புருதி சோம்பும். 95

### குற்றிருமல்தீரக்கிருதம்.

சோம்புநிலவாகையின்வேர் துய்யதிரிகடுகும்
ஆமாவினெய்யிலரைத்ததனை-தேம்பானத
தேனிற்குழைத்தருந்தத் தீருமேகுற்றிருமல்
வானிற்போய்விடுமாம் வண்ணம. 96

### நீர்க்கடுப்புத்தீரமருந்து.

வண்ணமுற்றக்காசும் வருந்தவரைவிரையுந்
திண்ணமுத்தகதேற்றாவின் சேர்விரையும்-நிண்ணு
கனிபுளியின்கொட்டைத்தோல் கடுவிளநீர்சேர்த்தரைத்து
பனியில்வைத்துண்ணீர்க் கடுப்பறும். 97

### பெரும்பாடுதீர தேற்றாவிரைலேகியம்.

பாறும்பெரும்பாடு பாரமாய்க்காணெடுத்தால்
ஆறுந்தேற்றாவிரையரைத் தெடுத்துக்-கூறும்
பதக்குநீர்விட்டுப்பரிவுடனே லேகியஞ்செய்
திதக்கமாய்த்தானருந் தேகும். 98

### பேய்நாய்கடி தீர மருந்து.

ஏரும்எருக்கினவேரினிப இலைப்பழுப்பும்
ஆரும்புன்னைக்காயதன் பருப்பும்-வாகா
யரைத்தமருந்ததனை யவலிற்பிசறியுண்ண
வருத்தும்பேய்நாய்க்கடியை மாற்றும். 99

### பெரும்பாடுதீரசெய்.

மாற்றுசெய்பால்தீர்வள்ளிமானையதன்சாறும்
போற்றுதுத்திவேர்தன்னிற் பூண்டதோல்-நாற்றிசையில்
வந்தமுசுக்கையின்வேர்மானை நன்னாரியின்வேர்
அந்தமாகுங்கிழங் காம். 100

ஆம்பூமிசக்கரையதாகும் கிழங்கோர்த்த
னும்பூமிபனையிளங்கிழங்காய்-முன்னே
நெய்யிலாத்தேகாய்ச்சி நேரேயறிந்திடச்
செய்பெரும்பாடுவிட்டுச் செல்லும். 101

### நீரடைப்புங் கல்லடைப்புந் தீரமருந்து.

செல்லுமேநீரடைப்புத் தீரப்பெருகுறிஞ்சான்
கல்லத்திப்பட்டைக் கடுகுடனே-சொல்லுந்
திரிகடுநாயுருவி சேர்கொளிஞ்சிவேரும்
உரிநீரைவிட்டுட் டுடனே. 102

உடனேதான்காய்ச்சியத னுட்சோதிச்சுட்டிட்டு
திடனுய்வடித்ததனிற் சேர்க்கக்கேள்-மடநல்லாய்
காரம்பொரித்திட்டுக் கருதியரிந்திடவே
கூர்நல்லடைப்புக் கூடும். 103

### கல்லடைப்புத்தீர மருந்து.

கூடுகுமரிச்சோறுங் கூறுகருஞ்சீரகமும்
நீடுபஞ்சதாரையுமே நீகூட்டிப்-போடவே
கல்லடைப்புமாயுங் கடியபொரிகாரமதை
அல்லிளவெங்கீரி லருந்து. 104

### நீரடைப்புத் தீரக்குடிநீர்.

அருந்துசிறுபூனையின்வே ரானதழையெல்லாந்
திருந்தியேபரனையதிற்சேர்ந்து-பருந்தெரித்தி
நானுழிநீரொன்றாய் நாள்காலில்நீரடைப்பு
பான்மொழியே போகுமிதைப்பார். 105

### மூலம்பிரமியந்தீர மருந்து.

பாருமேமூலம் படர்ந்தபிரமியத்திற்
சேருமேதிரிபலையுஞ் சித்தரத்தை-சாருமே

ஆதளையினுற்றகிழற் கர்குமக்கிழங்கு
நீதமுடன்கூட்டியுண் ணீதான். 106

### வரட்சியா லுடம்புலரல்தீரக் குடிநீர்.

தானேவரட்சியாற் சற்றுடம்புவற்றுந்
தேனேயொருபடிநீ சேர்ந்தடுப்பில்-மானே
புகழாகக்காய்ச்சியதி னுற்றவெண்ணெய்தேசிப்
பழத்தளவுட்டருந்தப் பாயும். 107

பாயுமதன்பின்பு பண்பினுவின்னுமருந்
தோயாதசுக்குமிள கோமமுடன்-காயாத
வெள்ளறுகுதா துவளை மீறுகடுக்காய்காயம்
உள்ளசிவனார் வேம்போடு. 108

ஓடுவளைநாகணமும் ஒக்கவேதான்கூட்டி
நீடுநிழலதனில் நீயுலர்த்திக்-கூடவே
சூரணமாய்ச்செய்ததனைச் சூட்டவெருகடியாய்
காரணத்தினுள்ளபடி காண். 109

### நீர்கடுப்புத்தீரமருந்து.

சரணருக்குப்பாற்றுளியைக் காலில்பெருவிரற்கண்
பூணநகக்கண்ணிரண்டிற் பொதிகுத்தி-பூணப்
புலிக்கொட்டைத்தின்றுவிடிற் போகுமேநீர்க்கடுப்பு
அளிச்சேர்க்குழன்மாத ரன்பு. 110

### பித்தமயல்தீரமருந்து.

அம்புதுளசிச்சாறும் ஆனதோர்சர்க்கரையும்
இன்புதேசிப்பழச்சா றிதெல்லாம்-தென்பாக
உண்ணவேபித்தமய லோடுமெனவுரைத்த
வண்ணமிதுவென்றுசெப்பு மான். 111

### குன்மந்தீரமருந்து.

செப்புபெருந்தும்பையதிற் சேருங்கொழுந்துசுக்கோ
டொப்புவெள்வெங்காயமிள கோமமுடன்-தப்பா
வசம்புடனேகூட்டி வருமெருமைமோரிற்
பசம்பவேபாய்ச்சுகுன்மம் பாயும். 112

### வாயுஸ்தம்பனநோய்தீரக்குடிநீர்.

பாயுங்கழற்சிபருப் புடனேசார்வேளைவேர்
ஏயுமிளகுசுக்கோ டிங்குப்பு-தூய
பெருங்காயம்வெள்ளுள்ளி பின்வசம்புகூட்டி
சரியாய்நவபாண்டந் தன்னில். 113

தன்னிலரைத்ததனைத் தான்வெள்ளாட்டின்பாலில்
மின்னைபெட்டொன்றாக வேகவைத்து-சொன்னேன்
இதையருந்தவாயு விருத்தியதோர் தம்பனநோய்
பதைபதைத்தேயோடிவிடும் பார். 114

## வாதசுரோணிதந்தீர மருந்து.

பாரிங்குவெள்ளருகு பாரித்தசுண்ணாம்பும்
ஓர்முருங்கைப்பட்டையுமே யொன்றாகப்-பேர்பெரிய
மருந்தினையுண்டுவிட வாதசுரோணிதமும்
திருந்தாமலோடுமிதைச் செய். 115

## கல்லடைப்புத்தீரக்குடிநீர்.

செய்யபிரண்டையின்வேர் சேருகின்றசாரடைவேர்
கொய்யுங்கிராம்புகார் கோலரிசி-ஐயமற
சிங்கிபொன்னாங்காணிவேர் சேதனைகுடிநீரிற்
றங்குகின்றக்கல்விழுந் தான். 116

## சூலைசொறிசிரங்குதீர எண்ணெய்.

தாகினநல்லெண்ணெயுடன் சாதிலிங்கம்வெள்ளருகு
தேனைசமனாகச் சேர்த்தபின்பு-மானை
யறிவுடனைகாய்ச்சி யருந்தவேசூலை
சொறிசிரங்குபோமெனவே சொல். 117

## அரையாப்புத்தீர எண்ணெய்.

சொல்லுங்கொடிவேலித் துய்யவேர்சர்க்கரையும்
நல்வசம்புடனே நற்காயம்-வெல்லுமுள்ளி
விள்ளாநர்துநசு வேண்டுநல்லெண்ணெயிற்
கொள்ளரையாப்போகுமிதைக் கூறு. 118

## இருமற்கூட்டோடேதீரக்குடிநீர்.

கூறுஞ்சணப்பு கொளிஞ்சிநொச்சிவேரோடு
மாறுமுங்காவேளைசிற்றா மட்டிவேர்-ஊறும்
பொடுதலைகஞ்சாங்கோரை பொங்குசங்கின்வேரும்
கயபதோர்வேப்பலகுங் காண். 119

காணுங்கடுக்காய் கரியதோர்திப்பிலியும்
பூணும்பிராய்த்துளசி போதவே-தோணும்
வேலிப்பருத்திதரா வேண்டுமெனமிளகும்
பால்மொழியேயானுரைதனை பகரு. 120

பங்குவழுதிலையுர் பண்புபதினொன்மருந்தும்
தந்துநீர்நாலிலொன்றாய்த் தான்காய்ச்சி-பொங்கமாய்

கொண்டுவிடத்தானிருமற் கூட்டோடேயேகுமென
வண்டணிமாதேயுரைத்தேன் வாறு. 121

### இரத்தபிரமேகந்தீர மருந்து.

வாறுமுருங்கையின்பூ வண்மையுள்ளகற்றாழைச்
சோறுமாவெண்ணெயுஞ் சூழ்ந்தரைத்து-கூறுடனே
உண்ணவிரத்தமகா மேபோடுமபிரமேகம
விண்ணிலேபாயுமுடல் விட்டு. 122

### எரிகுன்மந்தீர மருந்து.

விட்டேவெள்ளாட்டின்பால் மின்னேதேங்காயின்பால்
இட்டேதான் திப்பிலியு மிந்துப்புந்-தட்டியே
பாகாக்காய்ச்சிப் பதமாய்க்கடுகருந்த
போகுமேகுன்மம் புகல். 123

புகல்கின்றசம்செவியம் புரியதிரிகடுகு
இகல்வாய்விளங்க மிதனோடே-பகலுங்
கருஞ்சீறிசித்கரத்தைக் கஸ்தூரிமஞ்சள்
திருந்துதிப்பிலிமூலஞ் சேர். 124

சேரஞ்சிலைநொச்சிச் சேர்ந்தபட்டைச்சாறுடனே
கூர்வெள்ளாட்டுப்பாலுங் கொண்டரைத்து-நேரான
நல்லெண்ணெயிற்காய்ச்சி நன்றாய்முழுகிவர
சொல்பீனசநீர்ப்பாய்ச் சோடும். 125

### விஷசுரஞ் சன்னிதீர எண்ணெய்.

ஓடுகத்தைச்சூரி யுறுவோடைவேரும்
நாடும்வேலிப்பருத்தி நல்வேருமகூடவே
தூதுவளைவேருந் துலங்குவிளாப்பாகலின்வேர்
ஈமிதல்லாம்பட்டை வேறும். 126

ஏறுவேம்பின்பட்டை யேற்றகடுக்காய்மிளகு
நாறும்வெள்ளுள்ளிபுட ணட்டியே-கூறும்
வசம்புடனே திப்பிலியும வந்தகுப்பைமேனி
கசங்காத்துத்திவேர் காணும். 127

காணும்மருந்தெல்லாங் கல்வமதிலேயரைத்து
பூணும்நல்லெண்ணெய்தனிற் பூண்டெரித்து-வேணுமே
லுள்ளருந்திமேற்பூச ஓடும்விஷசுரமும்
கள்ளமுள்ளஜன்னியதுங் கண்டு. 128

### துன்மாமிசம் நீர்ச்செறிப்புங் கல்லடைப்புந்தீரநெய்.

கண்டேகோழிக்காரங் காண்சோகியைச்சுட்டு
விண்டாவிரினய்கூட்டி வெயிலிட்டுக்-கொண்டேதான்

உள்ளேசெலுத்தியிட வோடுந்துன்மாமிசமுங்
கள்ளநீர்ச்செறிப்புங் கல்லும். 129

மூத்திரப்பெருக்குதீர மருந்து.

தேற்றுவிரைக்கடுக்காய் செப்புமாவாரைவிரை
எத்தவிளாம்பிசினோ டிந்நான் தும்-நேத்தியாய்
பங்குக்குகாற்பலமாய்ப் பசுவின்மோரும்பருக
பொங்கிவருநீரிழிவு போம். 130

சகலசுரஞ்சன்னிமேகம் தீரக்குடிநீர்.

வல்லசுரமதுபோம் மாந்தமொடுதோஷம்போம்
சொல்லில்வெகுதோஷம்போஞ் சோகைபோம்-நல்லாய்கேள்
தாலவெல்லாஞ்சுக்குடனே சாற்றுலக்குமிழ்வேர்
காலமேகாய்ச்சியுண்ணக் காண். 131

பல்வலிதீரக் கொப்பளிக்குங் கியாழம்.

மருக்காரைச்சுக்கு மருதந்தோல்வெள்வேல்
எருக்காவரைபிரம்போ டேழும்-நருக்கிட்டு
நாலிலொன்றாய்க்காய்ச்சி நாலுநாட்கொப்பளிக்கப்
பாலன்பல்லாங்கிழவன் பல். 132

கல்லடைப்புத்தீர மருந்து.

நக்குஞ்சிறுபூளை கானெரிஞ்சிமாவிலிங்கை
விக்கும்பேராமுட்டி வேர்தனி-லொக்கவே
கூட்டிக்கியாழமிட்டுக் கொள்ளவேகல்லடைப்பு
காட்டிக்கழன்றோடுங் காண். 133

குணவாகடம் முற்றிற்று.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

வெகுநாளாய்க் காத்திருந்த விந்தையான நூல்

வெளிவந்துவிட்டது.

அஃதென்ன? அதுதான்

# ஆர்மோனிய

## அனுபவ சங்கீத ரத்னம்

ஸங்கீத நேயர்களே! யாவரும் எளிதில் தாமே கற்றுக்கொள்ளும்படி ஆர்மோன்யத்தைக் கையில் எடுத்தது முதல் இரண்டு கைகளாலும் சபையில் வாசித்து ஆனந்திக்கும் வரையுள்ள விஷயங்களையும் இடத்திற்குத் தகுந்தபடி உபகர்ணப்படங்களைக் காண்பித்து கீர்த்தனைகள், கண்ணிகள், தேவாரம் திருவருட்பா, இராமாயணம், நந்தனார்சரித்திரம், தில்லானு, காவடிச்சிந்து ஓரடி பார்ஸிரோட் இன்னும் அனேக பாடல்களும் அவைகளுக்குக் தகுந்தவாறு சுரங்களமைத்து எளிய நடையில் இனிய வசனத்தோடு கிரவுன் 16-சைஸ் கிளேஸ் பேப்பரில் அச்சிட்டு அழகிய பைண்டுடன் விற்பனைக்குத் தயாராகயிருக்கின்றது.

இதன் விலை 1-க்கு ரூபா 1 0 0

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

ஒவ்வொருவரும் வாசிக்கத்தகுந்த அதியற்புத

ஆச்சரியத்தைத் தரக்கூடிய நாவல்

# ரத்னகாந்தா.

இவ்வரிய நாவல் நந் தமிழ்நாட்டில் யாவரும் விரும்பத்தக்க அதியற்புத கதாலங்கார ஆபரணமாக ஏற்படுத்தியிருக்கின்றது. இதை வாசித்தோர்பலரும் குடும்பவாழ்க்கையில் அவசியம் அனுசரிக்கவேண்டிய ஒழுக்கத்தையும் இன்பத்தையும் அளித்து அகமகிழச்செய்யும் ஆற்றலுள்ளது. மனதைக் கவரத்தக்க கதைத்தொடர்பையும் ஆழ்ந்த கருத்தையும் நீதியையும் இடை இடையில் சேர்த்து ஸ்திரீ புருஷாதியந்தமும் உபயோகிக்கும்விதமாய் சுலப நடையில் வெளியிடப்பட்டிருக்கிறது. இதை யாவரும் வாங்கி வாசித்து ஆனந்திக்க மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது.

புத்தகம் 1-க்கு அணு 0 12 0

**பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்**

பிரம்பூர் பாரக்ஸ் போஸ்டு,

மதராஸ்.